
# சாளரம்

இளையோர் திங்கள் இதழ்

வடபுலத்தின் மாபெரும் திருப்பாட்டுப் போட்டி

க. நகேந்திரன்
ஜேநாறி மரத்தடி
கொக்குவில்




வரலாற்றில் நிலைத்துவிட்ட தியாகம் - அன்னை பூபதி -

ஏப்ரல் —1994

விலை 15/-

பொது அறிவைப் பெற்றால் முழு மனிதன் ஆகலாம்

அழகுடன், நேர்த்தியாக உங்கள்
அச்சுவேலைகளை செய்து பெற்றிட

# புதுயுக அச்சகம்
# (NEW ERA PRESS)

உங்கள் பிரசுர வேலைகளை
நியாயமான கட்டணத்துடன்
பூர்த்தி செய்து தருகிறோம்.

# புதுயுக அச்சகம்
# (NEW ERA PRESS)

வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தொடர்புகள்:

இல. 571, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.


மாணவர் ஆக்கத்திறனை பரிசோதிக்கும் நோக்கில் கட்டுரைப் போட்டி ஒன்று சாளரம் சஞ்சிகையில் இடம்பெறவுள்ளது.

**பரிசு 1000 ரூபா**

**விபரம் அடுத்த இதழில்**

க. நகுலேந்திரன்
பூநாறி மரத்தடி
இணுவில்

சாளரம்
கதவு 3 (25) காற்றலை 9

## இந்த இதழில்..

- ☐ ஆசிரியர் தலையங்கம்
- ☐ விளையாட்டு
- ☐ கால்மாக்சின் ஜென்னி
- ☐ மருத்துவம்
- ☐ தெறிப்பு
- ☐ பகலவன் பதில்கள்
- ☐ இலக்கியங்களில் பெண்கள்
- ☐ அன்னை பூபதி நினைவாக ..
- ☐ வழக்காற்றில் தஞ்சமடைந்த தமிழ்ப் பண்பாடு
- ☐ இலக்கியச் செய்திகள்
- ☐ மாணவர் பக்கம்
- ☐ குறும்புகள்
- ☐ அறிவுலகம்
- ☐ றொபேட் பேடன் பவல் பிரபு
- ☐ ஆங்கிலம் கற்போம்
- ☐ சிறுகதை
- ☐ வரலாற்றில் நிலைபெற்றுவிட்ட தியாகம்
- ☐ பொது அறிவுப் போட்டி

# வட்டங்களுக்குள்ளிருந்து வெளியே வருவோம்

இனர்தியான ஒடுக்குமுறைக்குட்பட்டு அதற்கெதிராக போராடிக் கொண்டிருக்கும் மக்கள் நாம். எமது மண்ணில் கௌரவமான, பூரண சுதந்திரத்துடன் வாழத்துடிப்பவர்கள். இதற்காக நாம் நாள்தோறும் எதிர்கொள்ளும் துன்பங்கள் சாதாரணமானவை அல்ல.

சமூக விடுதலையுடன் கூடிய தேசவிடுதலையே பூரணமானதும் உண்மையானதுமாகும்.

உலகின் பல பகுதிகளில் பெண்களுக்கெதிரான வன்முறைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை. எமது மண்ணில் தேசத்தின் பாதுகாப்பினையே பெண்கள் பொறுப்பேற்றுப் போராடிக் கொண்டிருக்கின்றனர். இது ஓர் மகிழ்வு தரும் முன்னேற்றம். புரட்சிகரமாற்றம்.

ஆனாலும், இங்கு பெண்விடுதலை முற்றுமுழுதாக ஏற்பட்டு விட்டதா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும். பிற்போக்கான சமூகக்கட்டுப்பாடுகளும், ஆணாதிக்கமும் இன்னும் ஆட்சிசெலுத்திக் கொண்டுதானிருக்கின்றன. இதனால் பெண்கள் சிறைக்குள்தான் தள்ளப்பட்டுள்ளனர். இச்சிறைகள் உடைபட வேண்டும்.

சமூகத்தினுள்ளிருக்கும் இன்னொரு முக்கியபிரச்சினை சாதி ஒடுக்குமுறை. ஒரு காலத்தில், தாழ்த்தப்பட்டவர்கள் எனக்கருதப்பட்ட மக்கள் உயர்சாதியினர் எனச் சொல்லப்பட்டோரால் கடுமையாக ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்பட்டு வந்தனர். இன்று அந்நிலை தளர்ந்துள்ளது. ஆனால் முற்றுமுழுவதுமாக நீங்கிவிடவில்லை. அணுகுமுறைகளில் இது தளர்ந்திருந்த போதும் மனவுலகில் இருந்துகொண்டுதானிருக்கின்றது. பல கிராமப்புறங்களில் இன்னும் கூட சாதி ஒடுக்குமுறைகள் தொடர்ந்து கொண்டுதானுள்ளன.

மற்றது, பிரதேச, ஊர் பாகுபாடுகள். ஒவ்வொரு பிரதேசத்திற்கும், ஊருக்கும் ஒவ்வொரு விதத்தில் தனித்துவங்கள் காணப்படலாம். அதன் காரணமாக அப்பிரதேசத்தவர் - அவ்வூரவர் தம்மை உயர்வாக எண்ணிக்கொள்ளலாம். ஆனால், இன்னொரு பிரதேசத்தை - ஊரை சேர்ந்தோரை குறைவானவர்களாக எண்ணவோ, அவ்வாறு கருதி ஒதுக்கவோ எவருக்கும் உரிமை இல்லை. ஏனையோருக்கும் ஏதோ விதங்களில், தனித்துவமான சிறப்பம்சங்கள் காணப்படலாம். அவற்றினை இனங்கண்டு பரஸ்பரம் மதித்துக்கொள்ளப் பழக வேண்டும்.

தற்போதுள்ள போர்ச் சூழலில் புதியதோர் பிரிவினரும் தாழ்வானவர்களாகக் கருதப்படத் தொடங்கியுள்ளனர். இராணுவத் தாக்குதல்கள், ஆக்கிரமிப்புக்கள் காரணமாக தங்களது ஊர்கள் பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்வோரே இப் பிரிவினர். இவர்கள் 'அகதிகள்' என சமூகத்தில் சற்றுக்குறைவாக மதிக்கப்படுவதை இன்று காண முடிகிறது. மூன்றாம் உலக நாடுகளில் 'அகதி' என்கிற புதியதோர் சாதியமைப்பு தோன்றினாலும் தோன்றலாம் என ஆய்வாளர் கருதுகின்றனர்.

சின்னச்சின்ன வட்டங்களுக்குள்ளிருந்து வெளியே வருவோம். நாம் தமிழர்கள், மனிதர்கள் என்கிற பெருவெளிக்குள் இணைந்து கொள்வோம். பூரணமான சுதந்திர மக்களாக வாழ்வோம்.

---


வாழ்க்கையிலிருந்தும் அரசியலிலிருந்தும் விலகி நிற்கும் கல்வியானது பொய்யும் பித்தலாட்டமுமே என்பதை நாம் பகிரங்கமாக என்றும் பிரகடனம் செய்வோம்.


— லெனின்

# தமிழீழ வட புலத்தின் மாபெரும் துடுப்பாட்டப் போட்டி - 1994

## யாழ். மத்திய கல்லூரி - எதிர் - பரி. யோவான் கல்லூரி

மார்ச் மாதம் 18 - 19 திகதிகளில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்திலே நடைபெற்ற இப்பெரும் போட்டியில் யாழ். மத்திய அணி 7 துடுப்பாளர்களைத் தம் வசம் தக்கவைத்த நிலையில் வெற்றிவாகை சூடியது. பல்வேறு நிறங்களாலும் கருமை நிறத் தலைகளாலும் சூழப்பெற்ற மைதானத்தில் வெண்ணிற ஆடையணிந்த 11 துடுப்பாளர்கள் ஆங்காங்கே பந்தை நோக்கிய வண்ணம் நிற்க திருவாளர்கள் ரவீந்திரன், முருகவேல் நடுவர்களாகக் கடமையாற்ற, துடுப்பாளர்கள் தமது இலக்குகளைக் காப்பாற்றுவதுடன் ஓட்டங்களை எடுத்து விறுவிறுப்பும் துடுப்பாட்ட ரசிகர்களிடம் ஏற்பட்ட சுறுசுறுப்பும் ஆனந்தமும் துடுப்பாட்ட விசிறி (Fan)களிடம் ஏற்பட்ட ஆவேசமும் கண்கொள்ளாக் காட்சியாயிருந்தன. விசிறிகளால் ஆட்டம் இடையிடையே தடைப்பட்டதால் யாவரும்





இவர்களை வெறுத்ததும் மறுக்கமுடியாத உண்மை (Fan) என்ற சொல் (Fanatic) என்ற சொல்லின் குறுக்கம் என்பதை இங்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

இரு அணித்தலைவர்களும் களத்தில் பூவா, தலையா போட்டுப்பார்த்ததில் பரி. யோவான் அணித்தலைவர் வெற்றி பெற்று போட்டியின் முதல் ஆட்டத்தில் 148 ஓட்டங்களுக்கு சகல துடுப்பாளர்களும் ஆட்டமிழந்தனர்.




தொடர்ந்து யாழ். மத்திய அணியினர் தமது முதல் ஆட்டத்தில் 257 ஓட்டங்களை எடுத்த நிலையில் இரண்டாம் நாள் காலை 11 மணிக்கு 9 துடுப்பாளர்கள் ஆட்டமிழந்த நிலையில் தமது முதல் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டனர், இந்நேரததில் எஸ். ஆகாஷ் ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

இவ்வாட்டத்தில் அணித்தலைவர் எஸ். மதிவதனன் மூன்று தடவைகளும் துணைத்தலைவர் கே. சுரேஷ் ஒரு தடவையும் எல்லைக் கோட்டுக்கு மேலாக பந்தை அடித்த ஆறு ஓட்டங்கள் ஒவ்வொன்றும் ரசிகர்களின் கோஷப் பாராட்டுதலைப் பெற்றது.

பரி. யோவான் அணியினர் 109 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் தமது இரண்டாவது ஆட்

டத்தை ஆரம்பித்து 189 ஓட்டங்களுக்குச் சகல துடுப்பாளர்களும் ஆட்டமிழந்தனர். இவ்வாட்டத்தில் வி. எஸ். நிர்மலானந்தன் எல்லைக் கோட்டுக்கு மேலாகப் பந்தை அடித்து ஆட்டத்தை விறுவிறுப்படையச் செய்தார்.



ஆட்டத்தின் சிறந்த பந்து தடுப்பாளராக தெரிவாகிய யாழ். பரியோவான கல்லூரி அணியைச் சேர்ந்த எஸ். நிமலன்.

பரி. யோவான் அணியின் ஓட்ட எண்ணிக்கையைச் சமனாக்குவதற்கு 80 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலையில் தமது இரண்டாவது ஆட்டத்தை ஆரம்பித்த யாழ். மத்திய அணியினர் 3 துடுப்பாளர்களை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்று வெற்றிவாகை சூடினர்.

90-ஆவது தடவையாக ஆடப்பெற்ற இப்பெரும் போட்டியில் பின்வரும் பரிசுகள் தீர்ப்பாளர்களால் தெரிவு செய்யப்பட்டன.

01. சிறந்த துடுப்பாளர்:- எஸ். மணிவதனன்
யாழ். மத்திய கல்லூரி

02. சிறந்த பந்து வீச்சாளர்:- எஸ். ஆகாஷ்
யாழ். மத்திய கல்லூரி

03. சிறந்த பந்து தடுப்பாளர்:- எஸ். நிமலன்
யாழ். பரி. யோவான் கல்லூரி

04. முத்துறை வல்லவர்:- எஸ். ஆகாஷ்
யாழ். மத்திய கல்லூரி

05. ஆட்டத்தின் நாயகன்:- கே. சுரேஷ்
யாழ். மத்திய கல்லூரி


போட்டியின் அதிகூடுதலான ஓட்டங்களாக 64 ஓட்டங்களை எடுத்த எஸ். ஆகாஷ் ஆட்டமிழக்காமலிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

1904-ஆம் ஆண்டு முதன் முதலில் ஓராண்டில் இரு தடவைகளும பின்னர் ஆண்டு தோறும் நடைபெற்ற இத் துடுப்பாட்டப் பெரும் போட்டி இவ்வருடம் 90-ஆவது தடவையாக நடைபெற்றது. இப்பெரும் போட்டி இந்நாட்டிலேயே இரண்டாவது பெரும் போட்டி எனப் பெயர் பெற்றுள்ளது. முதலாவது பெரும் போட்டி றோயல் கல்லூரி- எதிர்- புனித தோமஸ் கல்லூரி கொழும்பு.

யாழ். மத்திய கல்லூரியில் வண. பிறெட்றிக் வெஸ்ரர் ஈராண்டுகள் அதிபராயிருந்த போது 1881-ஆம் ஆண்டிலே இக் கல்லூரியில் துடுப்பாட்டத்தை அறிமுகஞ் செய்து வைத்தார். பின்னர் ஏனைய கல்லூரிகளுக்கும் பரவிய இவ் விளையாட்டு யாழ். மத்திய கல்லூரி, யாழ். பரி. யோவான் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரிகளிலும், யாழ். விளையாட்டுக் கழகத்திலும் வளர்ச்சி பெற்றது.

அந் நாளில் இக் கல்லூரிகள் தம்மிடம் ஒரு சிறந்த அணி உருவாகி விட்டவுடன் ஏனைய கல்லூரிகளைப் போட்டிக்கழைத்தன. இந் நாளில் பயிற்றுப்பாயில் ஆடப்படும் இவ்வாட்டம் அந் நாளில் புல் தரையில் ஆடப்பெற்றன. அவ்வாறு ஆடும் பொழுது ஆட்டத்தின் இறுதிக் கட்டத்தில் பந்து துடுப்பாளர்களைப் பதம் பார்த்து விடும் அபாயமும் இருந்தது.

யாழ். நகரில் அந் நாளில் இரு பெரும் திருச்சபைகளால் நடாத்தப் பெற்ற இரு பெரும் கல்லூரிகள் யாழ். மத்தியகல்லூரியும் (1816-இல் ஆரம்பம்) பரி. யோவான் கல்லூரியும், (1823-இல் ஆரம்பம்) ஆகும். எனவே இவ்விருபெரும் கல்லூரிகளுக்



சிறந்த பந்து வீச்சாளராகவும், முத்துறை வல்லுனராகவும் தெரிவாகிய யாழ். மத்திய கல்லூரி அணியைச் சேர்ந்த எஸ் ஆகாஷ்



யாழ். மத்திய கல்லூரி அதிபரும், (இடது) யாழ். பரியோவான் கல்லூரி அதிபரும்.


கும் இடையே ஆரம்பித்த துடுப்பாட்டப் போட்டித் தொடர் வடபுலத்தின் பெரும் துடுப்பாட்டப் போட்டியாகப் பரிணமித்துள்ளது.

ஆண்டுதோறும் நடைபெற்ற இப் போட்டிகளிலே விறுவிறுப்புக்குக் குறைவேயில்லை. ஆரம்ப காலங்களில் இரு கல்லூரிகளும் மாறிமாறி வெற்றி பெற்றன. பின்னர் 1928 முதல் 32 வரையும் மீண்டும் 1941 முதல் 47 வரையும் பரியோவான் அணி வெற்றி பெற்றது. 1960ஆம் ஆண்டில் பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்ததாலோ, என்னவோ 1970 ஆம் ஆண்டில் யாழ். மத்திய கல்லூரி வெற்றிபெற்ற பின் 14 ஆண்டுகள் ஆட்டம் வெற்றி தோல்வியின்றிமுடிவுற்றது. 1985முதல் 1989 வரை ஆட்டம் நடைபெறவில்லை. அடுத்த ஆண்டில் பரியோவான் அணி வெற்றிபெற்றது நாட்டு நிலைமையின் காரணத்தால் 1991 ஆம் ஆண்டில் ஆட்டம் நடைபெறவில்லை.


சென்ற வருடம் மிகவும் பரபரப்பான ஆட்டத்தில் பரியோவான் அணித் தலைவர் பீ. சஞ்சீவும் ஜீ. சிறீதரனும் தமது அணி தோல்வியடைவிலிருந்து காப்பாற்றியது பலருடைய பாராட்டையும் பெற்றது.

துடுப்பாட்டம் இத்தகைய தொரு விளையாட்டு.

The Match is not over till Last Over is over.



யாழ். மத்திய கல்லூரி



பரி. யோவான் கல்லூரி

## ஓவிய வாக்கியம்

வாசகர்களே இம்முறை சாளரம் அட்டைப் படத்திற்கே ஓவிய வாக்கியம் எழுதி அனுப்புங்கள்.

# கால்மார்க்சின் ஜென்னி

ஒரு மனிதன் ஆளுமையை உருவாக்குவதில் அம் மனிதன் வாழும் சூழலுக்கும், அவனின் ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்கும், மனைவிக்கும் அதிக பங்குண்டு. இந்தவகையில் பார்த்தால் சமூக சிந்தனையாளரான கால்மாக்சின் சிந்தனைப் படைப்புக்கள் வெளிவருவதற்கு அவரின் மனைவியான ஜென்னி செய்த தியாகங்கள் வியப்புக்குரியன.

1814-ஆம் ஆண்டு பிரஷ்யா நாட்டில் ஒரு பிரபுத்துவக் குடும்பத்தில் ஜென்னி பிறந்தார். யூதக் குடும்பத்தில் பிறந்த கால்மாக்சுடன் குழந்தைப் பருவத்திலிருந்தே ஜென்னி பழகி வந்தார். மாக்சும் ஜென்னியும் தாங்கள் இருவரும் திருமணம் செய்து கொள்வதென தமது மாணவப் பருவத்திலேயே முடிவு செய்திருந்தனர். ஆனால் அறிவு வளர்ந்த காலத்தில் தான் படக்கூடிய இன்னல்களைப் புரிந்துகொண்ட மாக்ஸ் அவற்றைப்பற்றி ஜென்னிக்கு எடுத்துரைத்தார் தங்களின் திருமணத்தைப் பற்றி நன்றாக யோசிக்குமாறு ஜென்னியிடம் கூறினார். திருமணத்தை தவிர்க்கமுடியுமானால் தவிர்க்குமாறும் கூறினார்.

உண்மை நிலைகளை விளங்கிக் கொண்ட ஜென்னி மாக்சின் இன்னல்களில் பங்கெடுப்பதாகக் கூறினார் இதன் பின்பே இருவரும் திருமணம் செய்துகொண்டனர். மாக்சுக்காகவும், அவரின் அறிவியலுக்காகவும், இலட்சியத்துக்காகவும் தன்னை அர்ப்பணிக்க எடுத்துக்கொண்ட தீர்மானத்தை ஜென்னி தன் வாழ்நாள்வரை காப்பாற்றினார். இதனை அவர்கள் இருவரின் வாழ்க்கையின் சில கட்டங்களில் இருந்து பார்த்தால் ஜென்னி பட்ட துயரங்களை விளங்கிக்கொள்ளலாம்.

'றெயினிச்சி செய்துங்' என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்துகொண்டே மாக்ஸ் தனது சிந்தனைப் படைப்புக்களை வெளியிடலானார். மாக்சின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத ஜேர்மனிய அரசாங்கம் அவரின் பத்திரிகைக்குத் தடை விதித்தது. அத்துடன் மாக்சையும் நாடு கடத்தியது. என்று மாக்ஸ் நாடு கடத்தப்பட்டாரோ அன்றிலிருந்தே அவரின் வருமான வழிகள் அடைபட்டன. இதனால் குடும்பத்தில் வறுமைநிலை தலைதூக்கியது. வறுமையையும், துயரத்தையும் மகிழ்ச்சியோடு உள்வாங்கும் ஜென்னியின் தியாக வாழ்க்கையும் ஆரம்பமாகியது. இத்தனைக்கும் மத்தியில் மாக்ஸ் தனது அறிவியல் ஆராய்ச்சிகளோடு முன்னேறினார்.

ஒருமுறை, ஒருவேளை உணவு உண்பதற்குக் கூட கஷ்டமான நிலையில் மாக்சின் குடும்பம் இருந்தது. இந்த நாட்களில் போதிய உணவின்மையால் ஜென்னிக்கு மூளை கும்ப நோய் ஏற்பட்டு படுக்கையில் கிடந்தார். இத்தகைய சூழலிலும் மாக்ஸ் தனது ஆய்வுகளில் அயராது ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

ஜென்னி நோயுற்று படுக்கையில் இருந்தசமயம் ஒருநாள் தனது சக நண்பர்களுடன் இரவு ஒன்பது மணிக்கே வீட்டுக்குவந்தார். வீட்டுக்கு வந்த மாக்ஸ் ஜென்னியிடம் சுகம் விசாரித்துவிட்டு தன் நண்பர்களுடன் நீண்டநேரம் உரையாடிக்கொண்டிருந்தார்.



மாக்சின் நண்பர்களுக்கு கோப்பி தயாரித்துக் கொடுக்க சீனி இல்லை என்பதை அறிந்திருந்த ஜென்னி படுக்கையில் இருந்தவாறே மாக்சை அழைத்து "கோப்பி தயாரிக்க சீனி இல்லை. வெறும் கோப்பி மட்டுமே உண்டு அதனை எடுத்து நண்பர்களுக்கு பரிமாறுங்கள்" என அன்புடன் கூறினாள். இவ் வேதனையான நிகழ்வை அவர்களின் சூழலில் வைத்துப் புரிந்துகொள்வது அவசியம். உண்மையில் ஒரு சாதாரண பெண் ஆத்திரப்பட்டிருக்கவேண்டிய கட்டம் இது. கணவன் தன்னைக் கவனிக்கவில்லை. தனது பிள்ளைகளைக் கவனிக்கவில்லை. குடும்ப வறுமையைப்போக்க உழைக்கவில்லை எனப் பலவாறுகூறி சினம்கொண்டிருக்கவேண்டும். ஆனால் ஜென்னி அதற்கு மாறாகவே நடந்துகொண்டார்.

மாக்ஸ் லண்டன் நகரிலுள்ள நூல்நிலையங்களில் படித்துவிட்டு மாலை நேரங்களிலேயே வீடு திரும்புவது வழக்கம். வீட்டில் தன் பிள்ளைகளோடு வறுமையிலிருக்கும் ஜென்னி, மாக்சின் வருகையைக் கண்டதும் ஓடிச்சென்று இன்று எவ்வளவு ரூபாய் உழைத்தீர்கள்? இரவுச் சாப்பாட்டிற்கு என்ன

வாங்கி வந்தீர்கள்? என்று கேட்டதே இல்லை. பதிலாக இன்று புதிதாக என்ன படித்தீர்கள்? என்பதே மாக்சுக்காக ஜென்னியிடம் காத்திருக்கும் கேள்வியாகும். இந்தவிதமான நடத்தைகளிலிருந்து ஜென்னி எவ்வளவு ஆழமாக மாக்சையும், அறிவிய லையும்நேசித்திருந்தார் என்பதை சிறப்பாக அடை யாளம்காணலாம்.

ஜென்னிக்கும் மாக்சுக்கும் பன்னிரண்டுக்கு மேற்பட்ட பிள்ளைகள் இருந்தபோதிலும் அவர் களில் ஒன்று மட்டுமே ஆண் குழந்தையாகும். அவ் ஆண் குழந்தை நோய்வாய்ப்பட்டு ஒருநாள் இறந்து விட்டது அப்போது ''என் குழந்தை பிறந்தபோது அதற்குத் தொட்டிலில்லை. அது இறந்தபோது அதற்கு சவப்பெட்டியில்லை'' என்று ஜென்னி கூறிய உருக்கமான வார்த்தைகளிலிருந்து அவர் களின் குடும்ப வறுமையின் உச்சநிலையை நாம் உணர்ந்துகொள்ளலாம்.

ஜென்னியும் மாக்சும் வசதியுள்ள குடும்பமாக வாழ்வதற்குரிய அடிப்படைத் தகுதிகள் இருந்தன. மாக்ஸ் கலாநிதிப்பட்டம் பெற்றிருந்தார். இப் பட்டத்தை வைத்துக்கொண்டு அவர் எத்தகைய பதவிக்கும் போயிருக்கலாம். ஜென்னி அரச சபை யில் மந்திரிப் பதவி வகிக்கும் குடும்பத்தைச்சேர்ந்த பெண். இவ்வாறான நிலைகளில் இருந்துகொண்டு வறுமையிலும் நெருக்கடிகளிலும் வாழ்ந்த ஜென்னி ஏதாவது வேலைதேடுமாறு தன் கணவனை நிர்ப் பந்தித்ததேயில்லை. எத்தகைய துன்ப துயரங்களும் மாக்சுக்கும் ஜென்னிக்குமிடையிலான அன்னி யோன்னியத்தை பிரிக்கவில்லை. ஏனெனில் மாக்சின் இலட்சியபூர்வமான சிந்தனைப் படைப்புகளையும், அதன் தேவைகளையும் ஜென்னி விளங்கிக்கொண் டாள். அதனால் தன் கணவனின் இலட்சியபூர்வ மான படைப்புக்களுக்கு பக்கத்துணையாக இருந்து துயரங்களை ஏற்றுக்கொண்டாள்.

ஒருமுறை ஒரு நிருபர் மாக்சிடம் பின்வரு மாறு கேள்வி எழுப்பினார். ''ஒரு கதைக்குக் கேட்கிறேன் நீங்கள் மீண்டும் பிறந்தால் எதனை விரும்புவீர்கள்'' அதற்கு மறுமொழியாக ''திருமணம் செய்யக்கூடாது'' என்று பதிலளித்தார் மாக்ஸ் அப்போது, நிருபர் மீண்டும் கேட்டார் ''ஏன் உங்கள் காதல் திருமண வாழ்வு கசத்துவிட்டதா? மாக்ஸ் அதற்குப் பதிலளிக்கையில் ''இல்லை, என் னோடு வாழ்ந்த காலத்தில் ஜென்னி செய்த தியா கங்களை என்னால் சகிக்கமுடியாதிருந்தது'' என்று கூறினார். மாக்சின் இப்பதிலிலிருந்தும், ஜென்னி பட்ட துயரங்களிலிருந்தும் ஒரு முடிவுக்குப் போக லாம். அதாவது மாக்ஸ் ஜென்னியைப் புரிந்து கொண்டதை விட, ஜென்னி மாக்சைப்புரிந்து கொண்டது அதிகம் எனலாம்.

மாக்சுக்கு மனைவியாகவும், அவரின் அறிவியல் பங்காளியாகவும் இருந்து அவலங்களைச் சுமந்த ஜென்னியின் இதயம் 02.12 1881 அன்று தன் துடிப்பை நிறுத்தியது. மாக்சின் மிகக் கடினமான வாழ்வில் ஜென்னி என்ற பாத்திரம் இல்லையென் றால் மாக்ஸ் என்ற சிந்தனையாளரை நாம் சந் தித்திருக்க முடியுமா என்பது கேள்வி. அறிவிய லுக்காக ஒரு பெண் அளவற்ற துன்பங்களை மகிழ்ச்சியோடு சுமந்தாள் என்ற விடயத்தில் ஜென்னி உலகப் பெண்களுக்கு ஒரு சிறந்த முன் னுதாரணம்மிக்க பெண்ணாக விளங்குகின்றார். மார்ச் 8-ஆம் திகதி சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடும் ஒவ்வொருவரும் ஜென்னியையும் ஒருகணம் நினைவுகூரவேண்டும்.

செ. ஜேசுநேசன்

# மத்திய அமெரிக்கப் பொதுச்சந்தை

இது சுதந்திரமான பிரதேசங்களுக்கிடையி ப்பு வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒன்றிணை லானமூலம் பிரதேச பொருளாதார முன்னேற்றத் திற்கு வசதியளிப்பதற்காக நிறுவப்பட்டதை சர்வ தேசசங்கமாகும். 1960, டிசெம்பரில்கௌதமாலா, ஹொண்டுறாஸ், எல் சல்வடோர் மற்றும் நிக் கரகுவா ஆகிய நாடுகள் மத்திய அமெரிக்கப் பொருளாதார ஒன்றிணைப்பில் ஒப்பமிட்ட பொது உடன்படிக்கையினால் இது நடை முறைக்கு வந்தது. 1962 - ஜூலையில் கோஸ்ராறிக்காவும் சேர்ந்தது.

பொருளாதார அமைச்சர்கள் பிரதி அமைச் சர்களை உள்ளடக்கிய ஆணைக்குழு மற்றும் நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கிகளின் தலை வர்களை உள்ளடக்கிய ஆணைக்குழு மற்றும் நிர் வாகவேலைகளைச் செய்வதற்கான நிரந்தரச் செயலகம் ஆகியவற்றை இதன் நிறுவனம் கொண்டிருக்கும். 1961-இல் மத்திய அமெரிக்க வங்கி ஒன்று பொருளாதார ஒன்றிணைப்பிற்கா கச் செயற்படத் தொடங்கியது. அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி வழங்குவதும், பிரதேச உள் ளமைப்புத் திட்டங்களுக்கான நிதியை நிர்வகிப் பதும் அதன் நோக்கங்களாகும். வேறுபல கூட் டமைப்புகளும், நிறுவனங்களும் இணைக்கப்பட் டன.

## மருத்துவம்

# கீரையின் மருத்துவமும் மகத்துவமும்

மனித இனத்திற்காக இயற்கை அளித்துள்ள எண்ணற்ற நன்மைகளில் முக்கியமானவையாக கீரைகள் (இலைகள்) திகழ்கின்றன. வெறும் கீரைகளை பச்சையாகப் பக்குவப்படுத்தி உண்டுவந்தாலே ஒரு மனிதன் எல்லாவகைச் சத்துக்களையும் பெற்று உடல்நலத்தோடு உயிர் வாழ்ந்துவிட முடியும்.

சில சாதாரண கீரைகள் இறைச்சி, மீன், முட்டை போன்றவற்றை விட உயர்வானது என கருதப்படுகின்றன. கீரைகள் சத்தான உணவாக மட்டுமல்லாமல் மருந்தாகவும் விளங்குகின்றன. கீரைகள் உண்பதாலேயே சில வகை நோய்கள் நீங்கிவிடுகின்றன.

கீரைகள் சுவையினைத் தருபவையாக மட்டுமல்லாமல் உடல் நலத்திற்கேற்ற உணவாகவும் மனநலத்தைக்காக்கும் ஒரு சாதவீக உணவாகத் திகழ்கிறது.

அன்றாட உணவில் அதிகளவு கீரைகள் சேர்த்துக்கொள்ளும் மக்களால் நீண்டகாலம் வாழமுடியும். இதனை மருத்துவ உலகம் ஒப்புக்கொண்டுள்ளது.

நோய்வராமல் தடுக்கும் சக்தியும் நோய்வந்தாலும் விலக்கிக் குணப்படுத்தும் ஆற்றலும், உடலை எப்போதும் நலத்தோடு வைத்திருக்கும் திறனும் கீரை வகைகளுக்கு உண்டு.

இக்கீரைகள் நாளாந்த உணவில் சரிவிகிதத்தில் இடம்பெறும் போது உடலுறுப்புக்களின் இயல்பான செயற்பாடு சிறப்பாக அமைகிறது.

மலச்சிக்கலை தடுத்து, குடலில் உற்பத்தியாகும் பூச்சிகளை வெளியேற்றி எம்மை நோய்களிலிருந்து கீரைகள் பாதுகாக்கின்றன. உண்ணும் உணவின் குறைபாடுகளை நீக்கி நல்ல உடற்சக்தியினைத் தருகின்றன.

வாதம், காமாளை, இரத்த அழுத்தம், சிறுநீரக வியாதிகள், நீரிழிவுபோன்ற நோய்களுக்கு கீரைகள் நல்ல மருத்துவ உணவாக அமைகின்றன. சித்த மருத்துவத்தின் அடிப்படை பச்சிலை மருந்துகள் தாம். இப்பச்சிலைகள் வெறும் மருந்தாகப் பயன்படும்போது மூலிகை என்கிறோம். அவை உணவாகும்போது கீரை என்கிறோம்

சில இலைகளை சாறெடுத்தோ, கசாயமாக்கியோ உட்கொண்டு நோயை விலக்கிக்கொள்வதைப்போல கீரைகளை பக்குவமாகச் சமைத்து உண்டால் உடல் வலிமையினைப் பெறமுடியும். இவற்றில் எல்லாவிதமான சத்துக்களும் அடங்கி இருக்கின்றன. இதனை நம் முன்னோர்களே நன்கு அறிந்து வைத்திருந்தனர்.

ஆய்வுகள் கீரைகளில் அமைந்துள்ள சத்துக்களை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. புரதம், கொழுப்பு, மாச்சத்து போன்றவை பொதுவாக எல்லாக் கீரைகளிலும் காணப்படுகின்றன. தாது உப்புக்களாகிய சுண்ணாம்புச்சத்து, மணிச்சத்து, கந்தகச்சத்து, சாம்பல்சத்து முதலியனவும் எல்லாக்கீரைகளிலும் நிறைந்துள்ளன. உடல் வளர்ச்சிக்கும், பராமரிப்புக்கும் தேவையான உயிர்சத்துக்கள் A, B1, B2, B12, C ஆகியவைகள் கணிசமான அளவு கீரைகளில் உள்ளன.

நம் முன்னோரால் கீரையின் மகிமையைக் குறிக்கும் 'கீரையில்லா அன்னம் கூரையில்லா வீடு' என்றொரு பழமொழி சொல்லப்படுவதுண்டு அக்காலந்தொட்டு உணவுக்காக மட்டுமன்றி அரிய மருத்துவப் பயன்களுக்காகவும், கீரைவகைகளைப் போற்றி வளர்த்துவந்துள்ளனர். கிராமப் புறங்களில் கீரை வகைகளை விரும்பி சமைத்து உண்கின்றனர். ஆனால் நகரப்புறங்களில் கீரை உண்பவர்களின் தொகை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இதற்குக் காரணம், கீரைகள் ஏழைகளின் உணவு என அவர்கள் எண்ணுகின்றார்கள். இவர்கள் கீரைகளில்உள்ள சத்துக்களையும் மருத்துவப்பயன்களையும் முழுமையாக உணராமையே இதற்குக்காரணம்.

எங்கும் வளரக்கூடிய, விலையும் மலிவான கீரைவகைகளை எல்லோரும் தினசரி உணவில் சேர்த்துக்கொள்ளப்பழகவேண்டும். தினமும் 100 தொடக்கம் 125 கிராம் வரையான கீரைகளை உணவில் சேர்த்து உண்பது அவசியமானது என உணவியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

### நிழற்படத்தில் உருக்குறுக்கம்
### Micro - Filing of Documents

பெரிய புத்தகங்கள், பத்திரிகைகள், அறிக்கைகள் ஆகியவற்றைப் பெருந்தொகையாக வைத்திருக்கவேண்டியுள்ள நூலகங்கள் போன்றவைகளுக்குத் தகவல்களை நுண்ணியளவில் உருமாற்றிக் களஞ்சியப்படுத்துதல் ஒரு வரப்பிரசாதமாகும். தற்போது பிரித்தானிய அரும் பொருட்காட்சிச்சாலை ஒவ்வொரு வருடமும் 8 மைல் (13 கிலோ. மீ.) நீளத்திற்கு அடுக்கி விடக்கூடிய புத்தகங்களை அதனது நூலகத்திற் சேர்த்துக்கொள்கின்றது.



## சாளரம் படிக்காமல் இருக்கமுடியாது

இளையோர் மட்டுமன்றி வயோதிபர்கள், சிறுவர்கள்போன்றோரும் ஆவலுடனும் விருப்புடனும் சாளரம் வாசிக்கின்றனர். சாளரம் வாசிக்காமல் இருக்க முடியாது. ஒவ்வொரு மாதமும் சாளரத்தை வலைவாழ்மக்களுக்கு விரைவாகக் கிடைக்கக்கூடியதாகச் செய்யுமாறு வேண்டுகின்றேன்.

சி. இருபானந்தராஜா (பளை மகாவித்தியாலயம்) கச்சார் வெளி, பளை

## பூரிப்பு

என் அன்புச்சாளரமே நீ தினம் தினம் மலர்ந்திட்டால் என்போன்ற மாணவரின் மனதில் எவ்வளவு பூரிப்பு வரும்.

கா. காந்தகரன் யா / மருதங்கேணி இ. த. வித்தியாலயம், தாளையடி

## இப்போதுதான் தெரியவந்தது

பெப்ரவரி-மார்ச் மாத இதழில் ஆங்கிலமொழி கற்போம், அறிவுலகம் சிறப்பாக இருந்தன. நான் பெப்ரவரி மார்ச் இதழைத்தான் முதலில் வாசித்தேன். இவ்வளவு விடயங்கள் சாளரத்தில் அடங்கியிருப்பது இப்போதுதான் எனக்குத் தெரியவந்தது.

சி. செல்வமாலா (ஆண்டு 11) யா/தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளையார் மகாவித்தியாலயம்.

## அறிவுலகம்

உலகளாவிய ரீதியிலான செய்திகள் பகுதியில் ஆர்வம் கொண்டிருந்த போது அறிவுக்கண் இருளாக இருந்தபோது, அவ்வறிவுக்கண்களை திறந்துவைத்தது சாளரம் என்றால் மிகையாகாது. இன்றுசாளரத்தில் 'அறிவுலகம்' பகுதியை ஆர்வத்துடன் படிக்கிறேன். அது சமைக்கப்பட்ட வரப்பிரசாதமாகும்.

அ. ஜெயரஞ்சன், பிள்ளையார் கோவிலடி, இளையராஜன் மேற்கு உடுப்பிட்டி.

## பயனுள்ள போட்டி

இளையோர் இதழான சாளரத்தில் நீங்கள் அளிக்கும் பொது அறிவுப்போட்டி பலருக்கு அறியாத விடயங்கள் பலவற்றை தெரியப்படுத்துகின்றது.

இ. ஜெயக்குமார் (ஆண்டு 11) யா / ஹாட்லிக்கல்லூரி

## எதிர்பார்ப்பு

சென்ற இதழில் மருத்துவம் பகுதியில் இரட்டைப்பிறப்பு பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். மேலும் இதுபோன்ற விபரங்களை எதிர்பார்க்கிறேன். சாளரம் இதழ் எமக்கு ஒழுங்காகக் கிடைப்பதில்லை. தயவுசெய்து அதனை நிவர்த்திசெய்யுங்கள். இ. ஜனகன், யா/இளையராஜன் மகாவித்தியாலயம்.

## சிறுகதை

சாளரத்தில் முதலில் நான் பார்த்தது. சிறுகதையைத்தான் நான். எதிர்பார்த்தது கதையின் முடிவில் அச்சிறுவன் வாய்க்காலில் சடலமாக இறந்திருப்பான் என்றுதான். ஆனால், முடிவில் அச்சிறுவன் எதிர்கால சிற்பிகளை உருவாக்கும் தலைவரின் அணைப்பில் இருக்கிறான். இதனால் இதயப் பூரிப்பு அடைந்தேன். இவ்வாறான சிறுகதைகள் தொடர்ந்தும் வரவேண்டும்.

வே. நவச்செல்வன் (ஆண்டு 12 கலைப்பிரிவு) பளை மகா வித்தியாலயம்

## போட்டிமூலம் பல விடயங்களை அறிகின்றோம்

பொது அறிவுப்போட்டி வினாக்களுக்கு நான் விடையளித்தமை தொடர்பாக தாங்கள் அனுப்பிய மூன்றாம் பரிசுக்குரிய 'அன்பளிப்பு மடல்' கிடைக்கப்பெற்றமை குறித்து மகிழ்ச்சியடைகிறேன். அத்துடன் சாளரம் பெப்ரவரி - மார்ச் இதழும் கிடைக்கப்பெற்றது. மேலும், இப்போட்டி மூலமாக பலவிடயங்கள் அறியக்கூடியதாகவுள்ளது. சோ. முரளிதரன், நல்லூர்

## கடினமான சொற்பதங்கள்

சாளரத்தில் வெளியாகும் "ஆங்கிலம் கற்போம்" பாடம் பிரயோசனமானதாகவுள்ளது. ஆயினும் கடந்த இதழில் வெளியான கடிதத்தில் சொற்பதங்கள் சற்று கடுமையானதாக இருந்தது. சம்பாசனைகள் விரும்பத்தக்கவை எனவே, முதலில் சம்பாசனைகளைப் பிரசுரித்து பின்னொருகட்டத்தில் கடிதங்கள், கட்டுரைகளை பிரசுரித்தால் நல்லது என நான் நினைக்கிறேன்.

சா. சுந்தரவேல், சாவகச்சேரி.

---

## குறிப்பு

கடந்த இதழில் பிரசுரமான 'ஆங்கிலம் கற்போம்' பாடப் தொடர்பான சிறுதவறுகள் மின்னொச்சியிலிருந்து திரு. சி. வி. இராஜேந்திரனால் சுட்டிக்காட்டப்பட்டு எழுதப்பெற்ற கடிதம் கிடைத்தது. அத்துடன் ஆங்கிலப்பாடம் தொடர்பான ஆலோசனைகள், கருத்துக்கள் பலவும் எமக்கு வந்து சேர்ந்துள்ளன. அவற்றினை நன்றியுடன் பரிசீலனைக்கெடுத்துக் கொண்டுள்ளோம். — ஆசிரியர்




ம. நிர்மலதாசன்,
ஆனைக்கோட்டை.

கே: சிறுவர்களை விபச்சாரத்திற்குப் பயன்படுத்தும் நடவடிக்கை இலங்கையிலும் உள்ளதாக பத்திரிகைச் செய்தியொன்றில் படித்தேன். இது உண்மையா?

ப: சிறுவர்கள் அதிகமாக விபச்சாரத்தில் ஈடுபடும் நாடுகளில் இலங்கை மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளதாக சுவீடன் ஆய்வாளர் ஒருவர் கூறியுள்ளதாக ஒரு பத்திரிகையில் அண்மையில் பார்த்தேன். இலங்கையில் விபச்சாரத்தில் ஈடுபடும் 6 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை 80,000 தொடக்கம் 100,000 வரை இருக்கலாம். இவர்களில் 80,000 பேர் சிலாபத்திலிருந்து நீர்கொழும்பு (கொச்சிக்கடை) வரையான பிரதேசத்திலும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்கல்ல வரையான பிரதேசத்திலும் அதிகளவில் உள்ளதாக 1991 டிசம்பர் நியூயோர்க்கில் நடந்த 'சுற்றுலா வலய விபச்சாரம்' எனும் மாநாட்டில் புள்ளி விபரம் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் கொழும்பிலிருந்து வெளியாகும் பத்திரிகையொன்று தெரிவிக்கிறது. என்ன இப்போது நம்புவீர்களா? இந்தச் சீரழிவு தமிழீழ மண்ணிற்கு பரவாமலிருப்பதற்காக இந்தப் போராட்டத்திற்கு நன்றி சொல்வோம்.

வ. குகநேசன்,
கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

கே: ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடையினை விதித்துள்ள இவ்வேளை எமது மண்ணிலுள்ள வர்த்தகர்கள் சிலர் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி பொருட்களைப் பதுக்குவதும், அதிக விலைக்கு விற்று கொள்ளை இலாபம் ஈட்டுவதும் அடிக்கடி நடைபெறுகின்றதே இதனைத் தடுக்கமுடியாதா?

ப: நீங்கள் கூறுவது உண்மைதான். பொருளாதாரத் தடையினால் பல பொருட்களுக்கு இந்த தட்டுப்பாடு நிலவுகின்றது. போக்குவரத்துத்தடை அல்லது போக்குவரத்துச்செலவீனங்கள் காரணமாக வரும் பொருளுக்கும் அதிக விலை நிர்ணயிக்கப்படுகின்றது இவை தவிர்க்க முடியாத ஒன்றே. எனினும், 'இவ்வாரம் கொழும்பிலிருந்து கப்பல் வராது, 'ஒளாலி போக்குவரத்து சிலநாட்கள் நடைபெறாது, இப்படி சிலசெய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்தவுடனேயே கடைகளில் பொருட்கள் பல மாயமாய் மறைந்துவிடுகின்றன. அல்லது விலை கூடிவிடுகின்றன. இதனால் பொதுமக்கள் பெரும் துன்பத்தை எதிர்கொள்கின்றனர். பொருளாதாரச் சுமையால் நசிந்து போயிருக்கும் பொதுமக்களை மேலும் நசிப்பது போன்ற செயலே பதுக்கலும், கொள்ளை இலாப விற்பனையும், இதனை சம்பந்தப்பட்டவர்கள் சிந்தித்து, உணர்ந்து திருந்த வேண்டும்.

வே. தர்சினி,
காங்கேசன்துறைவீதி,
கொக்குவில்.

கே: பெண்விடுதலை என்பது தமிழீழத்தைப் பொறுத்தமட்டில் எந்த அளவில் உள்ளது?

ப: மண்விடுதலையைப் பெண்கள் பொறுப்பேற்கும் அளவில் உயர்ந்துள்ளது. சமூகத்தில் ஆங்காங்கே வெவ்வேறு வடிவங்களில் காணப்படும் பெண்ணடக்கு முறைகள் முற்றாக உடைபட்டுப் போகும் காலம் விரைந்து வந்துகொண்டிருக்கிறது.

வே. தவச்செல்வம்,
பளை மகாவித்தியாலயம்

கே: தமிழீழத்தின் கல்விவளம் எதிர்காலத்தில் எப்படி அமைந்தால் எதிர்காலச்சிறார்கள் பயனடைவார்கள்?

ப: மனிதனின் சுயமான ஆற்றலை வளர்ப்பதாகவும், சுயமான சிந்தனையை வளர்ப்பதாகவும், கல்வி அமைய வேண்டும். அக்கல்வியினால் விளையும் அறிவு நாடு, சமூகம் குறித்த பற்றுதலை உண்டாக்குவதாக இருத்தல் வேண்டும். சுயநலத்திற்காகவோ, இன்னொருவருக்கு கருவியாகப்பயன்படுவதாகவோ கல்வி அமைதல்கூடாது எதிர்காலத்தில் எமது கல்வியமைப்பு இவ்வாறானதாக அமையும்.

க. சிவதாசன், மட்டுவில்

கே; இன்று சிங்கள அரசியல்வாதிகளினதும், இராணுவ அதிகாரிகளினதும் பேச்சுகள் யுத்தம் தொடர்வதை ஊக்குவிப்பதாகவே உள்ளனவே?

ப: இவர்கள் தங்களது பலவீனங்களையும் தோல்விகளையும் மூடிமறைத்து சிங்கள மக்களைத் திருப்திப்படுத்துவதற்கு பலவிதமான கோசங்களை எழுப்பியவண்ணமிருக்கின்றனர். இராணுவ ரீதியான படுதோல்விகளை அடுத்தடுத்து அனுபவித்தமையினால் சோர்ந்துபோயுள்ள சிப்பாய்களை தட்டியெழுப்பி நம்பிக்கைபெறச் செய்வதற்காக புதிதாக பொறுப்பேற்றுள்ள இராணுவத் தளபதிகளும், அதிகாரிகளும் யுத்தம் குறித்து சத்தமிடுகின்றனர். புதிய தளபதிகளின் தலைமையில் உள்ள இராணுவம் இன்னொருமுறை படுதோல்வியடையும் போது கோசங்கள் ஓயும். மீண்டும் இன்னொருவர் புதிதாக வருவார். அவரும் சத்தமிடுவார். பின் ஓய்ந்துபோவார். இப்படியேதான் சிங்கள இராணுவத்தின் நிலைமை தொடரப்போகிறது. எனினும், எவ்வளவு நாளைக்குத்தான் இந்த ஏமாற்றுப் பலனளிக்கப்போகிறது?

சாந்தகௌரி, மானிப்பாய்.

கே: தாம் உணவு அனுப்பாவிட்டால் வடக்கிலுள்ளவர்கள் மண்ணைத்தான் உண்ணவேண்டும் என சிறிலங்கா ஜனாதிபதி பேசியிருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்'?

ப: அவரின் எண்ணம் தவறானது, அது ஒருபுறமிருக்க, ஒருநாட்டின் தலைவர் எப்படிப்பேசவேண்டும் என்கிற பண்பாடு சிறிலங்கா ஜனாதிபதியிடம் இல்லைப் போன்றேதோன்றுகிறது. 'யுத்தத்திற்குப் பயன்படுத்தும் சக்தி பலாக்காய் வெட்டுவதற்கா'? போன்ற . வசனங்களை எல்லாம் இவர் பேசுகின்றார். சிங்கள நாட்டில் கூட ஓரளவு பண்பாடான சிங்கள மக்கள் இவ்வாறான பதங்களைப் பயன்படுத்துவதில்லை. நாட்டுப்புறங்களில் கல்வியறிவு குறைந்த, பண்பாடுகள் பற்றியறியாதவர்களே இவ்வாறான பதங்களை உபயோகிப்பதுண்டு. ஒரு நாட்டின் ஜனாதிபதி இவ்வாறெல்லாம் கீழிறங்கி வார்த்தைகளைக் கொட்டுவது ஆச்சரியமாகத்தானுள்ளது.

# நீரில் சீமெந்து இறுக்கமடைதல்
# (CEMENT SETS UNDER WATER)

அநேகமாகச் சீமெந்து இறுக்கமடைவதற்குச் சரியானளவு நீர் சேர்க்கப்படவேண்டும். அப்படியானால் பாலத்தைக்கட்டுவதற்குப் போட்லண்ட் சீமெந்து (Portland Cement) பயன்படுத்தப்படும் போது அது எவ்வாறு இறுக்கமடைகின்றது

சேர்க்கப்படும் நீர் ஆவியாவதால் சீமெந்து இறுக்கமடைவதில்லை. ஆனால், நீருடன் ஏற்படும் இரசாயன விளைவினாலேயே அது இறுக்கமடைகின்றது. நீரின் கீழ் பயன்படுத்தப்படும் போட்லண்ட் சீமெந்து, அதனுடன் சேர்ந்து கரையும் நீரின் அளவைக் கட்டுப்படுத்துகின்றது. இச் சீமெந்தின் குறுணிகள் (Grains) அமைந்துள்ள விதமே இதற்குக் காரணமாகும். ஆகையால் எவ்வளவு நீர் சேர்க்கப்படுகின்றதென்பது முக்கியமன்று. ஜோசெப் அஸ்ப்டின் (Joseph Aspdin) என்ற ஆங்கிலப்பொறியியலாளர் 1824-ம் ஆண்டில் இச்சீமெந்தைத் தயாரித்து விற்பதற்கான தனிச்சிறப்புரிமையைப் பெற்றிருந்தார்.

சுண்ணாம்புக்கற்களை அல்லது சுண்ணக்கட்டியை (கல்சியம் காபனேற்) களி மண்ணுடன் (அலுமினியம் சிலிக்கேற்) கலந்து, அவை கல்சியம் சிலிக்கேற்றின் இருவடிவங்களாக உருவாகும் வரை சூடாக்கப்படுகின்றன. இதிலொருவகை கல்சியம், சிலிக்கேற் (Tricalcium Silicate) ஆகும். இது விரைவாக நீருடன்சேர்ந்து கரைகிறது. அடுத்தவகை டைகல்சியம் சிலிக்கேற் (Diclacium Silicate) ஆகும். இது மிக மெதுவாகச் சேர்ந்து இறுகிக் கடினத்தன்மையை எய்துவதற்கு ஒரு மாதத்தை அல்லது அதற்குக் கூடுதலான காலத்தை எடுக்கின்றது.

கலங்கரை விளக்கங்கள், துறைமுக நிர்மாணிப்புகள், அணைக்கட்டுக்கள் பாலங்கள்போன்ற நீரில் அமைக்கப்படும் அநேகமான நிர்மாணிப்புகளுக்கும் திண்ணிய அத்திவாரத்தைக் கட்டுவதற்கும் போட்லண்ட் சீமெந்தின் உறுதியும், தண்ணீரை எதிர்க்கும் தன்மையும் இன்றும் உதவி வருகின்றன. கடல் அல்லது ஆற்றின் அடிப்பகுதிக்குக் கொங்கிறீற் (Concrete) கலவை பெரிய குழாய்கள் வழியாக ஊற்றப்பட்டு அது அங்கு இறுக்கமடைகின்றது.

# இலக்கியங்களில் பெண்கள்

கு. நகனேந்திரன்
நாறி மரத்தடி

உலகம் இன்று அறிவியல் துறையில் வியக்கத் தக்க முன்னேற்றங்களைக் கண்டுவருகின்றது. மனித வாழ்வியக்கமானது காலவோட்டத்தில் பல மாற்றங்களுடன் முனைப்புப்பெற்று வருகின்றது. பெண்கள் சகல துறைகளிலும் ஆண்களுக்கு நிக ராகவிளங்குகின்றனர். ஆனாலும் முற்று முழுதுமாக ஆணுக்குச் சரிசமனாக பெண் மதிக்கப்படுகின் றாளா? என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும். சமூகத்திலதும், ஆண்களினதும் கருத்துலகில் அடிப் படை மாற்றங்கள் இன்னும் நிகழவில்லை.

எமது பழந்தமிழ் இலக்கியங்களை புரட்டிப் பார்த்தால் பலவற்றில் வாழ்க்கையை நெறிப்படுத் தும் நீதிநெறிகள், போதனைகள் போன்றவற் றோடு பெண்களை அடிமைச்சிறைக்குள் வைத்தி ருக்கும் கருத்துக்களும் கணிசமாகவே காணப்படு கின்றன. அவ்விலக்கியங்களை எல்லாம் அப்படியே ஏற்றுக்கொண்டு அதன்படி பெண்களை நோக்கும் தன்மை சமூகத்தில் பொதுவாக இன்றும் காணப் படுகின்றது. அந்த இலக்கியங்களை எல்லாம் மீளாய்வு செய்து பெண்களை அடிமை கொள்ளும் கருத்துக்களை கடுமையாக மக்கள் மத்தியில் சுட் டிக்காட்டி புறக்கணிக்கப்படவேண்டிய தேவை இன் றுள்ளது. பிரேமா அருணாசலம் எழுதிய 'பத்தினித் தெய்வங்களும் பரத்தையர் வீதிகளும்' என்ற நூலி லிருந்து சில உதாரணங்கள் இச்சுட்டுரையில் குறிப் பிடப்படுகின்றது. தொல்காப்பியர் முதல் சித்தர் வரையுள்ள இலக்கியங்களில் பெண்கள் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளனர் என்பதை இந்நூல் விளக்கு கின்றது. இச்சிறுகட்டுரையில் ஒருசிலவற்றை மீட் டும் பார்ப்போம்.

தமிழில் எமக்குக்கிடைத்த முதல் நூலாகக் கரு தப்படும் தொல்காப்பியம். மிகப்பழமையான இலக் கண நூல் இது. இற்றைக்கு இரண்டாயிரத்து ஐந் நூறு ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய நூலாகும். இலக்கண மேதையான தொல்காப்பியர் பெண்ணுக் குரிய இலக்கணத்தை, பண்பை வரையறுத்துக் கூறுகிறார்.

''அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய''

(தொல். பொ - 96)

''உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செய்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்று''

(தொல். பொ - 111)

''நாணும் மடனும் பெண்மையை ஆகலின்''
''கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்''
மெல்லியல் பொறையும் நிறையும்...........
.............. கிழவோள் மாண்புகள்

(தொல். பொ - 150)

அச்சம், நாணம், மடம் என்று சொல்லப்படு கின்ற அறியாமை, கற்பு, ஒழுக்கம், பொறுத்துப் போதல் போன்ற குணாம்சங்கள் பெண்களிடத்தில் எப்போதும் இருக்கவேண்டிய நற்குணங்கள் என தொல்காப்பியர் இலக்கணம் வகுக்கிறார்.

ஆணுக்குரிய இலக்கணமாக தொல்காப்பியம் இப்படிக் கூறுகின்றது.

''பெருமையும் அறிவும் ஆடூஉமேன''

(தொல். பொ - 95)

பெருமையும் அறிவும் ஆணுக்குரிய இலக்கணம். வீரம் அவர்களுக்குரிய உயர்பண்பு. ஆணுக்கு கற்பு இலக்கணமில்லை. ஓர் ஆண்மகன் தன் மனைவி யைத்தவிர பல பெண்களுடன் தொடர்புகொண்டு வாழலாம்.

''காமக்கிழத்தி மனேயோள் என்றறிவர்''

(தொல் - பொ - 144)

''மாயப்பரத்தை உள்ளிய வழியும்''

(தொல். பொ - 145)

இவ்வடிகள் மேற்குறிப்பிட்ட கருத்துக்கு ஆதார மாகின்றது.

பெண்களை வீடுகளுக்குள் முடங்கிக்கிடக்கும் பாவைகளாக கணவனுக்கு அடங்கி நடக்கும் பேதை களாக, பிறபெண்களுடன் உறவு வைத்திருக்கும் கணவன்மார்களின் மனதைப் புண்படுத்தாமல் பணிந்துநடக்கும் தன்மையுள்ளவளாகவே தொல் காப்பியத்தின் பல இடங்களில் பெண்கள் வர்ணிக் கப்படுகின்றனர்.

தொல்காப்பியத்திற்கு அடுத்துத் தோன்றிய தாகக் கூறப்படுபவை சங்க இலக்கியங்கள் ஆகும். இக்காலகட்டத்தில் தமிழர்கள் சிறந்த நாகரீகத் துடன் திகழ்ந்தனர் என்றும், சங்ககாலத்தில் பெண் நன்கு மதிக்கப்பட்டாள் என்றும், பெண்ணுக்குச் சமவுரிமை இருந்தது எனவும் சிலர் கருதுகின்றனர். பெண்ணை வீரத்தாயாகச் சொன்ன புறநானூற் றின் பல இடங்களில் முரணான விடயங்களும்

உண்டு. விருந்தினரை உபசரிக்கும் பண்பு பெண்களின் பிறவிக்குணமாகக் கருதப்பட்டது.

"அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்"
(நற் - 142)

"எவ்விருள் தயரும் மனைவி"
(நற் - 121)

இவ்வரிகள் மேலே குறிப்பிட்ட கருத்திற்குச் சான்றுகள். சங்ககாலப் பெண்ணும் ஆணாதிக்கச் சமுதாயத்தில் இரண்டாம்தர குடிமகளாக, கணவனே தெய்வம் என்று கொண்டாடுபவளாக, ஆணின் தேவையைமட்டும் நிறைவேற்றும் பணிப்பெண்ணாகவே வாழ்ந்தாள். தொழில் காரணமாகக் கணவன் மனைவியை விட்டுப்பிரிந்தால் கணவன் இல்லாத அவ்வேளைகளில் பெண்ணானவள் தனது கூந்தலைச் சீவிமுடித்தல்கூட இல்லை. கூந்தலில் மலர் சூடுவதும் இல்லை. பெண்ணே ஆணுக்காகத்தான் என்றபோது அலங்காரங்களும் அவனுக்காகத்தான் என்பதையும் சங்கப்பாடல்களால் அறிய முடிகிறது.

............ மெல்லெண
மண்ணாக்கூந்தல் மாசறக் கழீஇச்
இப்போது கொண்டு பல்குரல் அழித்திய
(நற்றிணை - 42)

என்றபாடல் இக்கருத்தினை நிறுவுகின்றது. புகழ்பெற்ற காப்பியமான சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் பெண்களை தாழ்வானவராக்கும் கருத்துக்கள் கூறப்படுகின்றன. உதாரணத்திற்கு ஒன்று.

பாண்டியன் மனைவி, தன் கணவன் இறந்தவுடன் அவன் உடல்மீது விழுந்து உயிர் துறந்தாள். இளங்கோவடிகள் "கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்" என்பதை உணர்த்தி பாண்டியன் மனைவி உயிர்துறந்தாள் என்கிறார். கணவன் இறந்தவுடன் மனைவி உடனே உயிர்விடுதல் பெருமைக்குரியது என்கிறார். ஆணாதிக்க சமுதாயத்தைப் பிரதிபலிப்பவராகவே இளங்கோவடிகள் தன் காப்பியத்தைப்படைத்துள்ளார்.

தொல்காப்பியர் முதல் சித்தர் வரை பெண்கள் பற்றிய சித்தரிப்புகள் அவர்களை அடிமைப்படுத்துவதாகவே உள்ளன. இவையாவும் இன்றைய கால கட்டத்தில் மிக நுட்பமாக ஆய்வுசெய்யப்பட வேண்டியவைகளாகும்.

சரி, என்றோ இலக்கியங்களில் கூறப்பட்ட கருத்துக்களை எல்லாம் இன்று ஏன் கிளறவேண்டும் என ஒரு சாதாரண கேள்வி எழும்பலாம். இதற்கு பதில் உண்டு.

அக்கால இலக்கியங்களைப் போற்றும் பண்பு இன்றும் தொடர்ந்து வருகின்றது. அவற்றின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு மற்றவர்களுக்கு போதனை செய்வோர் அனேகர் உள்ளனர். இன்று நாகரீக உலகில் நன்றாகக் கற்றறிந்தவர்கள் கூட ஒரு பெண் நல்லவள் எனக்கூறுவதற்கு "தலை குனிந்தபடி நடப்பாள். அதிர்ந்து பேசமாட்டாள், வீட்டுக்கு எவரும் வந்தால் வெளியே வரமாட்டாள், எதிர்த்துக் கதைக்கமாட்டாள்" இப்படித்தான் உதாரணம் காட்டுகின்றனர்.

மேடைப்பேச்சுக்களிலோ, பட்டி மண்டபங்கள் விவாதங்கள் போன்றவற்றிலோ சமகாலப் பிரச்சினைகளை விடவும் பழைய இலக்கியங்களில் வந்த விடயங்களே கருப்பொருட்களாக அமைகின்றன. அந்தளவுக்கு அவ்விலக்கியங்களும் அவற்றில் கூறப்பட்டுள்ள கருத்துக்களும் மக்கள் மனங்களில் வேரூன்றியுள்ளன. ஆகவேதான் இன்று அவற்றை மீளாய்வு செய்யவேண்டியது அவசியமாகிறது. இக்காலத்திற்கு ஒவ்வாத, தவறான அனைத்துக் கருத்துக்களையும் விவாதத்திற் குட்படுத்தி நல்லனவற்றை ஏற்றுக்கொண்டு தீயனவற்றைப் புறக்கணிக்க அனைவரும் முன்வரவேண்டும்.

இந்துமதி

(பெப்ரவரி / மார்ச் இதழில் வெளியான புகைப்படத்திற்கான பரிசுக்கவிதை)

## தன்னிறைவு காண்போம்

குலுங்கும் நெற்கதிர்கள்
குனிந்தே நிலம் பார்க்கும்
ஆணும் பெண்ணும் சரிநிகர்
அரிவாள் எடுப்பதற்கு மட்டுமல்ல
ஆயுதங்கள் தூக்குவதற்குந் தான்!
மனதிலோ நிம்மதி
வாய்களோ அறுவடைப் பாடல்களைப்
பாடிக் கொண்டே இருக்கின்றன.

எம் உடன்பிறப்புகள்
எல்லைகளில் காவல்
மக்களோ வயல்களில் அறுவடை
முத்து முத்தான வியர்வை
கொத்துக் கொத்தான நெல்மணிகள்.

சி. மதுரா
மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி
ஆண்டு 9

# அன்னை பூபதி நினைவாக... (ஏப்ரல்-19 நினைவு நாள்)

## பெரும் படையதனை வென்ற பெயர்

அன்னை பூபதி
ஆதிக்கத்தின் அடித்தளத்தை
அதிரவைத்த பெயர்
ஆயுதபலத்தாலே
எமையடிமை கொள்வதற்கு
அலைகடல் ஏறிவந்த ஆதிக்கப் பேய்களை
இடியெனவே அடித்த பெயர்
அமைதி காக்க என்று சொல்லி
ஆள் அம்பு அணியுடனே
எம்போராட்டமதையழிக்க
எம் விடுதலைக்கு குழி பறிக்க
வந்த இந்தியனை அடிபணிய வைத்த பெயர்
பாடும் மீனும்
பால்வார்க்கும் ஆநிரையும்
பசுமை காட்டி நிற்கும் வயற்காலம் தோட்டமும்
வாய்த்து செழித்திருக்கும்
மட்டுநகர் மீதினிலே
பஞ்சமென்ற சொல்லினையே
கண்டிராத ஊரினிலே
மாதமொன்று பசிகிடந்து
மரணத்துள் வாழ்ந்திருந்து
வேசமிட்டு வந்தவரை
வீசி விட்ட பெயர்

அன்னை பூபதி
ஆதிக்கத்தின் அடித்தளத்தை
அதிர வைத்த பெயர்

ஆமிவருகுதென்றால்
அழுங்குழந்தை வாயடங்கும்
ஆச்சிகை தாவணியை தானாக இழுத்துவிடும்
இளைஞர் அவன் இதயங்கள்
துடிப்பதையே மறந்துவிடும்
மூச்சை உள்ளிழுத்து
மூதேவி வருகுதென்று முணுமுணுத்து
மூன்று நொடியினிலே
வீட்டின் மூலையிலே பதுங்கிவிடும்
காலமதில்......
தீயை எரிக்கும் பெரும்
தீயாகி நிமிர்ந்து நின்று
தன்மூச்சதனை ஈழத்தின்
பேச்சாகாய் உவந்தளித்த
தமிழ்த் தாயவளின் பெயரது

அன்னை பூபதி
ஆதிக்கத்தின் அடித்தளத்தை
அதிர வைத்த பெயர்

## பெண்ணினத்திற்குக் கிடைத்த பெருந்தலைவி

தன்மைபெறத் தமிழீழம் தன்னை ஈந்தாள்
திசையனைத்து மேவணங்குந் தாயளானாள்
பெண்ணினத்திற் குக்கிடைத்த பெருந்தலைவி
''பூபதியாள்'' இனவெழுச்சி வடிவந்தானோ?
விண்ணுயர்ந்த தற்கொடையதாலே அன்னை
வென்றனளே மண்பெருமை மகிமை காத்து
பண்டைநாளாக இந்தக் காலம் மாறிப்
போகையிலும் ''பூபதியாள்'' நாமம் ஓதும்.

அச்சமது இல்லையெனில் சாவை வென்றே
அற்புதங்கள் செய்திடலாம்! அவ்வாறேதான்
துச்சமெனக் கொண்டனளே உயிரை அன்னை
தோளினிலே தூக்கினளே ''அகிம்சை'' தன்னை
பச்சைமரத் தாணியன்ன உணர்வை நெஞ்சில்,
பதிப்பித்தாய் புதுப்பித்தாய் புதுமை செய்தாய்!
இச்சகத்தில் அழியாத வரலாறொன்றை
இயற்றினையே இனியபுகழ் நிலைக்கு மாறு!

அகிம்சையது வீழவில்லை; இந்தி வல்ல!
அரசதுவே தோற்றதுவாம்; உலக மெங்கும்
முகடுகளில் முழங்கியது அறத்தின் வன்மை
மூழ்கியது; திணறுவது இந்தி யாவே
முகிலினங்கள் மழையாகி அழிதல் போலே
முடிவெடுத்தாய் பயிர்செழித்து வாழ்வதற்கே
எகிறிப்பாய்த் தீகத்தின் உச்சம் சென்றாய்
எழுவான்க ரையெழுந்த தாயே வாழி!

''கோட்சே''க்கே உறவானோர் எங்கள் சொந்தக்
குடிமீது படைகொண்டார் அவரெ லும்புக்
கட்டுக்குள்ளே இதயம் குறுகிப் போச்சா?
''காந்தியம்'' இந்திக்கு மறந்தே யாச்சா?
மீட்போளாய்ப் பசிதின்றாய் திங்க ளொன்றாய்
மாமாங்கப் பதியினிலே முடியைக் கொண்டாய்
வீட்டினின்று வெளிநடந்தாய் நாட்டிற் காக
விடுதலைக்குப் ''புதியபுறம்'' கண்டாய் வாழி!

❁ இளந்திரையன்

---

பூவையாய் இருந்து பெரும்
புயலாகி எழுந்த பெயர்
இந்தியரின் வேசமதை
கலைத்திடவே எழுந்த பெயர்
அகவையது தடையில்லை
என்றே உரைத்த பெயர்
ஆயுதமின்றி நின்று
பெரும் படையதனை வென்றபெயர்

அன்னை பூபதி
ஆதிக்கத்தின் அடித்தளத்தை
அதிர வைத்த பெயர்

— அளவை வாசகன் —

# வழுக்கையாற்றில் தஞ்சமடைந்த தமிழர் பண்பாடு

சிந்துவெளியில் நிலவிய திராவிட நாகரீகம் யாழ்பாணத்தில் தஞ்சமடைந்துள்ளது என்ற கருத்து வலுவாக நிலைபெற்றுள்ள இக்காலத்தில் இந்தப் பண்பாடு தொடர்பான விளக்கங்கள் அறியப்பட வேண்டிய தேவை இப்போது எமக்கு ஏற்பட்டுள்ளது.

1980 களின் ஆரம்பத்தில் ஆனைக்கோட்டையில் இடம்பெற்ற தொல்பொருள் ஆராய்ச்சி இது தொடர்பான சில தகவல்களைத் தந்துள்ளது. ஆனாலும் அகழ்வாராய்ச்சி தொடர்பான அறிக்கைகள் முழுமையாகக் கிடைக்கப்பெறாமையால் இது குறித்த பூரண அறிவினை பெறமுடியாதுள்ளது. இருந்தபோதும் கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் இந்தப் பண்பாடு யாழ்ப்பாணத்தில் தஞ்சமடைவதற்கான காரணத்தை நாம் பார்த்தோமானால்,

சிந்து நதியை மையமாகக்கொண்டு எழுச்சி பெற்ற சிந்துவெளி நாகரீகம் உலகப்புகழ் பெற்றதாக பல வரலாற்று ஆசிரியர்களாலும் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. சீரான வாழ்க்கை, ஒழுங்கமைப்பிலான கட்டிட அமைப்புக்கள், போற்றத்தக்க வழிபாட்டு முறைகள் இவை யாவும் அங்கு காணப்பட்டன. இத்தகைய சிறப்புமிக்க சிந்துவெளி நாகரீகம் ஆரியப் படையெடுப்பு, வெள்ளப்பெருக்கு போன்ற காரணங்களால் அழிவடைந்தது. அவ்வாறு அழிவடைந்த காலங்களில் அங்கிருந்து அராபிக்கடல் மார்க்கமாக வந்த மக்களின் ஒரு பகுதியினர் இலங்கையின் வடபகுதியில் தங்கினர். இவர்கள் தமது கலாச்சாரம், பண்பாடுகளையும் கூடவே எடுத்துவந்து யாழ்ப்பாணப் பகுதியில் அடைக்கலம் தேடினர். யாழ்ப்பாணமும் நன்றாகவே அடைக்கலம் கொடுத்தது.

இறந்தோரை சவ அடக்கம் செய்தல் என்பது பண்பாட்டு வளர்ச்சியின் அளவுகோலாகத் திகழ்கிறது. ஆதியில் மனிதன் மிருகங்களைப்போன்றே மனிதர்கள் இறந்தாலும் அந்த இடத்தில் எறிந்து விட்டுச் சென்றான். பின்னர் அதனைப் புதைத்தான். காலம் போக அந்த இடத்துக்குப் பூக்கள் போட்டுவணங்கினான். புதைத்ததும் பூக்கள்போட்டு வணங்கியதும் என்பது ஓரிரு நாட்களில் நடைபெற்ற வளர்ச்சி இல்லை. இலட்சக் கணக்கான ஆண்டு காலம் கழித்தே இத்தகைய பண்பாடு வளர்ந்தது. இத்தகையவாறான பண்பாட்டு அடிப்படை சிந்துவெளியிலும் நிலவியது.

இங்கும் இறந்தவர்களை சவ அடக்கம் செய்யும்போது அவர்கள் அணிந்ததாகக் கருதப்படும் ஆடை அணிகளையும், அவர்கள் உட்கொண்ட உணவு வகைகளையும் நிவேதனமாக வைத்தனர். இவற்றை யாழ்ப்பாணத்தில் கண்டெடுத்த தொல்பொருட் சான்றுகள் காட்டி நிற்கின்றன. இதனை விட புறநானூற்றிலும் இதுபற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிந்துவெளி நாகரீக காலந்தொட்டு இப்பண்பாடு காணப்பட்டாலும் தென் இந்தியாவில் புதிய கற்காலத்திலும், அதன்பின் பெருங் கற்காலத்திலும் இந்த வழக்கம் மக்களின் அடக்கு முறைகளில் கடைப்பிடிக்கப்பட்டதை,

"இடுகவென்றோ சுடுகவென்றோ
படு குழிப் படுக்க"
என்று புற நானூறு
"இடுவோர் சுடுவோர்
தொடுகுழிப் படுப்போர்"
என்று மணிமேகலையும் குறுப்பிடுகிறது.

இத்தகைய வழக்கம் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களால் பேணப்பட்டதோடு வரலாற்றுக் காலத்திலும் இக் கலாச்சாரம் நீடித்தபோது இதுவும் நிலைத்திருந்தது என்பதை ஆனைக்கோட்டை, மாந்தை போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் உறுதிப்படுத்துகின்றன.

இத்தகைய தகவல்களின் அடிப்படையில் "அடைக்கலப் பிரதேசம்" பற்றிய பண்பாட்டினை அறிந்து கொள்ளலாம். ஆனைக்கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட இரண்டு மனித எலும்புக்கூடுகளும், அதனோடு கண்டெடுக்கப்பட்ட வெண்கல முத்திரை ஒன்றும் இக்கருத்தை வலுப்படுத்துகின்றன.

வெண்கல முத்திரையை வாசித்த பேராசிரியர் கா. இந்திரபாலா இது ஒரு இரு மொழிச் சாசனம் என்றும், முதல் வரியில் சிந்துவெளியை ஒத்த சித்திர எழுத்துக்கள் காணப்படுகின்றன என்றும், இத்தகைய சித்திர எழுத்துக்கள் பெருங் கற்கால மண்டபங்களிலும் உண்டெனவும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் சித்திர எழுத்துக்குக் கீழுள்ள பிராமி எழுத்துக்களை வாசிப்பதன்மூலம் சித்திர எழுத்துக்களை வாசிக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார். இவ் எழுத்துக்களை அவர் கோவேதன், கோவேந்தன் என்று வாசித்துள்ளார். இதிலிருந்து திராவிட மக்கள் அதுவும் கி. மு. மூன்றாம் இரண்டாம் நூற்றாண்டுகளில் பிராமி மொழியை அறிந்திருந்தனர் என்பதை அறிய முடிகிறது. அத்துடன் சிந்துவெளியில் நிலவிய பண்பாடு இங்கு தஞ்சமடைந்தது என்பதோடு அங்கு பழக்கத்திலிருந்த எழுத்தை வாசிக்க இங்கு பேணப்பட்ட பண்பாடு உதவுகின்றது என்பதும் கவனிக்கத்தக்கது.

மேலாய்வுகளின்மூலம் கிடைக்கப்பெறும் தகவல்களைக் கொண்டே இதுவரை நாம் எமது பண்பாடு குறித்த அறிவினை பெற்றிருந்தோம். எண்பதுகளின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற புதைபொருள் ஆராய்ச்சிகள் தமிழர் பண்பாடு குறித்த புதியதொரு கருத்தைத் தந்துள்ளது. ஆனால் அவை மேலும் வலுப்பெற ஆதாரங்கள் வேண்டும்.

அண்மையில் தமிழகத்திலிருந்து வரும் வாராந்த சஞ்சிகை ஒன்றில் ஆனைக்கோட்டையில் நிலவிய பண்பாடு குறித்து கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது. பேராசிரியர் இரா. மணிவண்ணன் ஆனைக்கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட முத்திரை வாசிக்கப்பட்டது என்பது சிந்துவெளி எழுத்து வாசிக்கப்படலாம் என்ற நம்பிக்கையைத் தந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். இந்த வகையில் பழம்பெரும் உலகப்புகழ் பெற்ற நாகரீகங்களில்

(15 ம் பக்கம் பார்க்க)

# இலக்கியச் செய்திகள்

அண்மையில் வெளிவந்த மூன்று நூல்களுக்கான மதிப்பீட்டு அரங்கு 27.02.94 அன்று மாலை எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் இடம்பெற்றது. தேசிய கலை, இலக்கியப் பேரவை ஏற்பாடு செய்த இந் நிகழ்வில் நந்தினி சேவியர் எழுதிய 'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்' சிதம்பரத் திருச்செந்திநாதன் எழுதிய 'வெட்டுமுகம்' மலையகக் கவிஞர்களின் கவிதைத் தொகுதியான 'குன்றத்துக் குமுறல்' ஆகிய நூல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. முறையே கலாநிதி சோ. கிருஸ்ணராஜா, ஆ. சிவரத்தினம், கவிஞர். இ. முருகையன் ஆகியோர் மதிப்புரைகள் நிகழ்த்தினர் மதிப்புரைகளின் இடையே இவர்கள் கூறிய இலக்கியம் குறித்த சில கருத்துக்கள் இங்கு தரப்படுகிறது.

## கலை, இலக்கிய வரலாறு

கலை, இலக்கிய வரலாறு என்பது ஏனைய வரலாறுகளைப் போலல்லாது வித்தியாசப் படுகிறது. அரசியல் வரலாறு, சமூகவரலாறு போலல்லாது தொடர்பறுந்த நிலையில் கலை, இலக்கியம் பற்றிய வரலாறு அமைந்து விடுகிறது.

ஒரு கலையோ இலக்கியமோ ஆரம்பத்தில் தோன்றி ஒரு கட்டம் வரையில் வளர்ந்து பின்பு வீழ்ச்சியடைந்து விடுகிறது. அல்லது தளர்ந்து விடுகிறது. அது தொடர்ச்சியான வளர்ச்சியினை... வரலாற்றினைப் பேண முடியாமற் போய்விடுகிறது. அதன் பின்பு இன்னுமோர் புதிய கலை வடிவமே தோன்றி வளர்கின்றது. ஆரம்ப காலத்தில் விதிக்கப்பட்ட இறுக்கமான விதி முறைகளே இதற்குக் காரணம். கலையானது அவ் விதிமுறைகளுக்குள்ளே கட்டுப்பட வேண்டியுள்ளது.

கலாநிதி சோ. கிருஸ்ணராஜா

## வாசகரின் மதிப்பீடு

நான் துறைசார்ந்த விமர்சகன் அல்ல. வாசகன் என்ற நிலையிலிருந்தே மதிப்பீட்டுரை செய்கிறேன். ஒரு எழுத்தாளன் தனது படைப்புக் குறித்த உண்மையான மதிப்பீட்டினை ஒரு வாசகனிடமிருந்து நேரடியாகப் பெறமுடியாமற் போவது கவலைக்குரியது ஆகும். ஒரு படைப்பினைப் பார்க்கும் போது அதன் உண்மைத் தன்மையை அறிய படைப்பாளனையும் பார்க்கவேண்டியுள்ளது. இப்போது ஒரு படைப்பு எந்தப் பத்திரிகையில், சஞ்சிகையில் வெளியானது என்பதையும் பார்க்க வேண்டியுள்ளது. எழுத்தாளன் எந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறோம் என்பதை முதலில் கவனத்தில் எடுத்து அதற்கேற்றவாறு தனது கருத்தையும், எழுத்தையும் மாற்றிக் கொள்கிறான்.

- ஆ. சிவரத்தினம்

## விமர்சனம்

ஒரு படைப்பைப் பற்றிய விமர்சனத்தை உண்மையில் ஒரு வாசகன் தான் செய்யவேண்டும். ஓரளவுக்கு படித்த, எழுத வாசிக்கத் தெரிந்தவனே வாசகனாக இருக்கிறான். அவனுடைய விமர்சனமே உண்மையானது. துறைசார்ந்த விமர்சகர்கள் ஒரு படைப்பினை விமர்சிக்கும் போது அவ் விமர்சனமானது வாசகனுக்கு உதவுவதாகவே அமைய வேண்டும் வாசகனை சிறிது தூரம் அழைத்துச் சென்று விடுவதாகவே அவ் விமர்சனம் இருத்தல் வேண்டும். தனிப்பட்ட புறக்கணிப்புக்கள், ஏற்றுக் கொள்ளல்கள் விமர்சனங்களாக இருக்கக் கூடாது, ஒரு பொருளின் நீள அகலங்களை அளந்து கூறுவது போலவோ, தராசில் நிறைபார்த்து கூறுவது போலவோ முடிவுகளை, தீர்ப்புகளை வழங்குவது விமர்சகனின் வேலையல்ல.

## கவிதை

கவிதை எளிமையானதாக அமைதல் வேண்டும். தற்போது விளங்காத, புதிர் போன்ற சில கவிதைகள் வெளிவருகின்றன. இவ்வாறு புரியாமல் உள்ள படைப்புகள் தான் இலக்கியத்தின் உச்சம் எனவும் சிலரால் கருதப்படுகின்றன. கவிதையோ எந்தவொரு இலக்கிய வடிவமோ வாசகனை புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு வேதனைப்படுத்தக் கூடாது. எம்மனதில் நிலைத்துநிற்கும் கவிதைகளை எடுத்துப் பார்ப்போமானால் அவை மிக எளிமையான சொற்களால் ஆனவை என்பது தெரியவரும். இன்று சொற்களைச் சடைந்து, சித்திரவதை செய்து விளங்காமல் பலர் எழுதுகின்றனர். 'போனேன்' என்ற வசனத்தை 'போதல் செய்தேன்' என்று எழுதுவதால் அது கவிதையாகிவிடுமா?

- கவிஞர் இ. முருகையன்

---

வழுக்கையாற்றில் (14-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றாகக் கூறப்படும் சிந்துவெளியின் பண்பாடு யாழ்ப்பாணத்தில் பேணப்பட்டது என்பது பெருமைக்குரியதே.

இத்தகைய பெருமைக்குரிய பண்பாடு குறித்த தடையங்களை மேலும் தேடுவதே இன்றைய சமுதாயத்தின் இன்னுமொரு பங்களிப்பாக அமையும். ஆகவே நாம் சிந்துவெளியை வழுக்கையாற்றில் தேடுவோம்.

# யப்பானிய மாணவரின்

கல்விமொழி மூலம் யப்பானிய மொழியாக இருப்பதனால் யப்பானிய மாணவர்கள் அனைவருமே மொழித் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். யப்பானிய மொழி பற்றிய மதிப்புணர்வு அவர்களுடைய மனங்களிலே ஆரம்ப நிலையிலே ஏற்பட வேண்டும். அதற்கான மொழிப் பயிற்சியைத் தனிப்பட்ட நிலையிலே மாணவர் பெற்றுக் கொள்ளச் சில நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆரம்பப் பாடசாலைக்கு மாணவர்கள் வரும்வரை காத்திராமல் கீழ்நிலைப் பாடசாலை மட்டத்திலேயே மாணவர்களுடைய மொழிப்பயிற்சி வகுப்பறையில் மட்டுமன்றி சிறப்புக் கள நிலையிலும் கொடுக்கப்படுகின்றது. கீழ்நிலைப் பாடசாலைகளில் பயில்கின்ற மாணவர்களுடைய தாய்மொழி அறிவினைப் பயிற்சி நிலையிலே பெருக்குவதற்கு தனியார் கல்வி நிறுவனங்கள் கீழ்நிலைப் பாடசாலைகளோடு சேர்ந்து திட்டமிட்டு இயங்குகின்றன. தாய்மொழியின் நாளாந்த பயன்பாட்டை மாணவர்கள் அறிந்து மொழியறிவின் அவசியத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே, இதற்கென 5 வயதிலிருந்து 10 வயது வரையான கீழ்நிலைப் பாடசாலை மாணவர்களுக்கு எழுத்து, பேச்சு, இலக்கணம் என்ற நிலைகளில் சிறப்பான பயிற்சி கூட்டு நிலையில் கொடுக்கப்படுகின்றது. குழு நிலையிலே மாணவர்களின் மொழித்திறனுக்கு ஏற்ப இணைந்து இம் மொழிப்பயிற்சி நடைபெறும். யப்பானிய மொழியைக் கற்பதற்கு கீழ்நிலைப் பாடசாலை மாணவர்கள் மூன்று விதமான வரி வடிவங்களை மனத்திலிருத்த வேண்டியவர்களாயுள்ளனர். ஒன்று யப்பானிய மொழிச் சொற்களை எழுதுவதற்கெனப் பயன்படுத்தப்படும் வரி வடிவம். இதனை ஹிரகந என்றழைப்பர். இரண்டாவது பிற மொழிச் சொற்களை யப்பானிய மொழியில் எழுதுவதற்கென பயன்படுத்தப்படும் வரிவடிவம். இதனை கதகந என்றழைப்பர். மூன்றாவது யப்பானியர் யப்பானிய மொழியை எழுதுவதற்கு ஆரம்பகாலத்திலிருந்து பயன்படுத்திய சீன வரிவடிவம் இதனை கஞ்ஜி என்றழைப்பர்.

இவ்வாறு மூன்று வரிவடிவங்களை யப்பானியர் பயன்படுத்துவதால் கீழ்நிலைப் பாடசாலை மாணவர்கள் எல்லோரும் மொழிப்பயிற்சியென தனியான ஒரு கற்கைநெறிக்கு உட்படுத்தப்படுகின்றனர். வரிவடிவங்களைச் செம்மையாகவும் சீராகவும் எழுதுவதற்கான பயிற்சியைப் பெற்ற பின்னர் மேல்நிலைக் கல்வியிலும் சிறப்பாகக் கற்பதற்கு அதனை துணையாகக் கொள்கின்றனர். மொழியின் பேணுகைக்கு அதன் வரிவடிவப் பேணல் மிகவும் அவசியம் என்பதை யப்பானியர் மாணவர்களுக்கு ஆரம்பநிலையிலே உணர்த்திவிடுகின்றனர். இன்னும் பிறமொழி வரிவடிவமான சீன வரிவடிவத்தையும் பிழையற எழுதும் பயிற்சியை மாணவர்க்கு ஏற்றகாலத்திலே கொடுக்கின்றனர். இன்று நவீன எழுது கருவிகளும் கணனிகளும் வந்த பின்னரும்கூட மரபான பழைய தூரிகை கொண்டே வரிவடிவத்தை எழுதுவதற்கு பயிற்சி அளிக்கின்றனர். இப்பயிற்சி பாடசாலைக்கு வெளியே தனிப்பட்ட ஒரு பயிற்சியாக இருப்பதால் மாணவர் எழுத்துத் திறன் அறிந்து அவர்களை வழிப்படுத்தவும் முடிகிறது. பயிற்சி பெற்ற மாணவர்கள் மத்தியிலே போட்டிகளை வைத்து மதிப்பீட்டு நிலையிலும் ஊக்குகின்றனர். யப்பானிய மாணவர்களின் வாழ்க்கை நெறியிலே இன்னொரு குறிப்பிடத்தக்க விடயம் அவர்களுடைய காலம் பற்றிய உணர்வாகும். நேரத்தை வீணாக்காது பொன்னைப் போலப் போற்றி கடமைகளைச் செய்வதற்கு மாணவ நிலையிலும் அவர்களுக்கு நல்ல பயிற்சி அளிக்கப்படுகிறது. இயற்கையின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மனிதனும் இயங்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டை யப்பானிய மாணவர் நன்குணர்ந்துள்ளனர். ஒவ்வொரு மாணவனும் காலத்தின் அருமையை உணர்ந்து கடமையைச் செய்து முடிப்பதற்குப் பயிற்றப்படுகின்றான். குறித்த கடமையைக் குறித்த நேரத்தில் செய்து முடிக்கும் கடமைவீரர்கள் யப்பானிய மாணவர்கள் எனலாம்.



இன்னொன்று மாணவர்களுடைய சீராகும் சீருடையுமாகும். எல்லா மாணவர்களும் சீருடை அணிந்தே பாடசாலைக்குச் செல்ல வேண்டும். இதனால் மாணவர்கள் வெளியிடங்களில் பாடசாலை நேரங்களில் நடமாடுவது மிகவும் கடினம். சீருடைகளும் மாணவர் கல்விபாண்டை இலகுவில் அடையாளம் காணக்கூடிய வகையில் அமைந்துள்ளன. பெற்றோரும் மற்றோரும் மாணவர்களைப் பிற இடங்களில் இலகுவாக இனங்காண்ப

# மாழிப்பற்று

க. நாகேந்திரன்
ஆனாறி மரத்தடி
கொக்குவில்



தற்கு இச் சீருடை பெரிதும் உதவுகின்றது. கீழ்நிலைப் பாடசாலைகளில் பயில்கின்ற மாணவர்களைத் தவறான இடங்களிலே காண நேர்கையில் நகர பாதுகாவலர்கள் அவர்களைக் கண்டித்து உரியவர்களிடம் உடனடியாக அடையாளம் கண்டு சேர்ப்பிக்கச் சீருடை உதவுகிறது. குழந்தை நிலையிலே பாடசாலைச் சீருடையின் முக்கியத்துவத்தை யப்பானிய மாணவர்கள் நன்குணர்ந்து கொள்கின்றனர். இன்னும் மாணவர்களுடைய பெயர்களும் பாடசாலை இலச்சினைகளும் சீருடையிலே பொறிக்கப்பட்டிருக்கும். இதனால் வீதி விபத்து அல்லது வேறு எதிர்பாராத இன்னல்களுக்கு மாணவர் ஆளாகும்போது அவர்கள் யாரென்பதை உடனடியாக இனங்கண்டு ஆவன செய்யமுடிகின்றது.

ஆசிரியர், மாணவர், பெற்றோர் என்ற மூன்று நிலைப்பட்டவர்களின் தொடர்பும் இங்கு குறிப்பிடத்தக்கது. வகுப்பு நிலையிலே மாணவனிடம் காணப்படும் குறை நிறைகளைப் பெற்றோர் ஆசிரியரைச் சந்தித்து உரையாடுவதன் மூலம் உடனடியாகவே தீர்த்துக் கொள்ள வாய்ப்பளிக்கப் படுகின்றது. பாடசாலை நேரம் தவிர்ந்த வேறு நேரங்களிலும் மாணவர் நலன் கருதி ஆசிரியர்களும் பெற்றோருடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வர். சில ஆசிரியர்கள் நேரடியாகப் பெற்றோரை வீட்டில் சென்று சந்தித்து மாணவர் குறைநிறைகளைப் பற்றி உரையாடுவர். மாணவர் உளவியல் தாக்கம் பற்றிப் பாடசாலை தனிப்பட்ட கவனம் செலுத்துகின்றது. பாடவேளை தவிர்ந்த ஏனைய நேரங்களில் மாணவன் தனது வகுப்பாசிரியரிடம் சென்று குறைநிறைகளை மனம் விட்டுப் பேசமுடியும். பெற்றோரிடம் பேசமுடியாத விடயங்களை உயர்நிலைமாணவர் தமது ஆசிரியரிடம் பேசி அறிவுரைகளைப் பெற்றுக்கொள்வர்.

பாடத்திட்டக் கல்வியுடன் பட்டறைக் கல்வியும் யப்பானியர் மாணவர்களது செல்நெறியைச் சீர்ப்படுத்துகின்றது. குழுநிலையிலே மாணவர்கள் இணைந்து பல செயற்பாடுகளைச் செய்கின்றனர். கள ஆய்வு, சுற்றுலா, போட்டிநிலைகள் என்பனவற்றில் குழு நிலையான பங்களிப்பு யப்பானிய மாணவர்களது சிறப்பான ஒற்றுமை நிலையை வெளிப்படுத்தும். பாடசாலை நிலையில் மட்டுமன்றித் தாம் வாழுகின்ற பிரதேசப் பண்பாடு பேணுகின்ற நிலையிலும் இக்குழு நிலையான பங்களிப்புப் பெரிதும் பயன்படுகின்றது. கள ஆய்வு நிலையில் தமது முன்னோர் பற்றியும் அவர்களது வாழ்க்கை நெறிபற்றியும் மாணவர் அறியவும் எண்ணிப் பார்க்கவும் வாய்ப்பேற்படுகின்றது. யப்பானியரது உணவு, உடை, உறையுள் என்பனவற்றைப் பிறநாட்டு நிலைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து மாணவர் தமது நாட்டுப் பண்பாட்டின் தனித்துவத்தைத் தாமாகவே நன்கு உணர்ந்து கொள்கின்றனர்.

பாடசாலை முடிவடைந்ததும் வீட்டிற்கோ அன்றேல் தனியார் கல்வி நிறுவனங்களுக்கோ யப்பானிய மாணவர் ஓடிச்செல்வதில்லை. பாடசாலை சார்ந்த கடமைகள் அனைத்தையும் குழுநிலையிலே செய்துமுடித்த பின்பே செல்கின்றனர். குழுநிலையிலே அவர்கள் தொழிற்படும்போது மாணவர்களுடைய அறிவாற்றலும் தனித்துவமும், தலைமைத்துவமும் வெளிப்படுகின்றன. கல்விசார் துறைகளன்றிப் பிற துறைகளிலே மாணவர் தனித்தனியாகப் பெற்றிருக்கும் ஆற்றலை மதிப்பீடு செய்து

திருமதி. மனோன்மணி சண்முகதாஸ்

எதிர்காலத்தில் அவர்களுடைய உயர்கல்வியை நெறிப்படுத்துவதற்கு இது பேருதவி புரிகின்றது. கீழ்நிலைப் பாடசாலை நிலையிலிருந்து இடைநிலை, உயர்நிலைப் பாடசாலைகளுக்குப் போகும்போது அந்தந்தக் கல்விநிலையில் இருந்து நிறைவு பெற்றுச் செல்வதைக் காட்டுவதற்காகப் பட்டமளிப்பு விழாக்கள் நடத்தப்படும். இந்தவிழா மாணவர் உள்ளத்திலே பெரியதொரு வளர்ச்சி நிலையை ஏற்படுத்தும் பண்புடையது. ஒருநிலையிலிருந்து இன்னொரு உயர்நிலைக்கு மாணவன் தான் உயர்ந்து செல்வதைத் தன்னளவில் அறிந்து பெருமிதங்கொள்வதுடன் சமூகநிலையில் தன்னுடைய அறிவு வளர்ச்சி ஏற்றுக்கொள்ளப்படுவதனையும் உணர்கிறான். பெற்றோர்கள் ஆசிரியர்கள் கூட தமது பணியின் ஒரு பங்கு செவ்வனே நிறைவேற்றப்பட்டதை உணர்ந்து மேலும் அந்த மாணவனுடைய வளர்ச்சி நிலைக்காகச் செய்யவேண்டிய கடமைகளை நல்லமுறையிலே திட்டமிட்டு செயலாற்றவும் விளைகின்றனர். இவ்வாறு ஒவ்வொரு பயில்நிலையிலும் மாணவர் உற்சாகமாகவும் விருப்புடனும் தமது கல்வியைத் தொடர்வதற்கும் தமது வருங்கால கடமைகளை அறிவதற்கும் உணர்வதற்


கும் பாடசாலை மாணவநிலையிலான பட்டமளிப் புகள் பேருதவிபுரிகின்றன.

யப்பானிய மாணவர்களது களப்பயிற்சி முறை பற்றியும் முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். தமது நாட்டின் பண்பாட்டைப் புலப்படுத்தி நிற்கின்ற அம்சங்களைப் பற்றிய அறிவினை மாணவர்கள் நிறைவு நிலையிலே பெற்றுக்கொள்வதற்காக பல களப் பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. மாண வர்களது மனதிலே தன்நாடு பற்றிய உணர்வுகள் ஆழமாக பதிவதற்கு இது நல்லுதவி செய்கின்றது. வரலாற்றுப் புகழ்பெற்ற இடங்களுக்கும், முக்கியத் துவம் பெற்ற இடங்களுக்கும் ஆசிரியர்கள் மாண வர்களை நேரடியாக அழைத்துச்சென்று அவற்றைப் பற்றிய அறிவினையும், எதிர்காலத்தில் மாணவர்கள் அவற்றைப்பற்றிய பேணலில் செய்ய வேண்டிய பங்களிப்புப் பற்றியும் விளக்குவதுடன் மாணவர்கள் எவ்வாறு அதைச்செய்யலாம் என் பதையும் செயல்முறை மூலம் விளக்குகின்றனர். எடுத்துக்காட்டாகக் கூறினால் பழைய கோவில் களுக்கு மாணவர்களை அழைத்துச்சென்று கோவில் பற்றிய வரலாற்றையும் வளர்ச்சி நிலையையும் கோவிற் பாதுகாவலர்களிடம் நேரடியாக அறியச் செய்வதுடன் கோவில் துப்பரவு, கோயில் நிர்வா கம் போன்ற விடயங்களிலே குறிப்பிட்ட மாணவர் களுக்கு பயிற்சியும் அளிக்கின்றனர். இதேபோல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்களை யும், ஏரிகளையும், மலைகளையும், ஆறுகளையும், பூங்காக்களையும் சென்று பார்வையிட்டு மாணவர் கள் அவற்றைத் தாமும் எதிர்காலத்தில் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வினைப் பெறச் செய்கின் றனர். இதனால் யப்பானிய மாணவர் தம்மினத் தின் தனித்துவத்தைச் செவ்வனே பாதுகாத்து தமது பின்னவர்களிடம் முறையாகக் கையளிப்புச் செய் யும் ஆற்றல் பெறுகின்றனர்.

## 5. தெளிநிலையும் நமது மாணவர்களும்

யப்பானிய மாணவர்களது வாழ்க்கைநெறி நமது தமிழ் மாணவர்களுக்கு முன்னோடியாக அமையக்கூடியது. எமது மொழியும், பண்பாடும், இனமும், மண்ணும் பாதுகாக்கப்படுவதற்கு மாண வர் எத்தகைய பங்களிப்பை நல்கலாமென்பதை யப்பானிய மாணவர் வாழ்க்கைநெறி தெளிவுபடுத் தும். நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் மாணவரி களிடையே சூழ்நிலையால் ஏற்படப் பெற்றோரும் ஆசிரியரும் நல்வழிப்படுத்த வேண்டும். யப்பானிய மாணவன் தனது பெற்றோரைவிட ஆசிரியர் களையே தன் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் முக்கியமானவர்கள் என நன்கு உணரவைக்கப்பட் டுள்ளான். யப்பானிலே பாடசாலை என்பது ஒரு மாணவனை வீடு என்னும் குறுகிய உலகநிலையான வாழ்வுக்கும் அப்பால் பரந்துபட்ட, அறியப்பட வேண்டிய உலகம் உண்டென்பதை அறிமுகம் செய்து வைக்கின்ற சிறந்த பயிற்சிக்களமாக கருதப்படுகி றது. இந்தக் கருத்து தமிழ் மாணவர்களுக்கும் பொருத்தமானது. எனவே மேலும் விரிவாகவும் நுணுக்கமாகவும் யப்பானிய மாணவர் உணர்வு களையும் செயற்பாடுகளையும் நாம் எமது தமிழ் மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். எமது தினத்தாள்கள், சஞ்சிகைகள், மாத, வார இதழ்கள் வானொலி என்பன இவைபற்றிய மேல திக தகவல்களை எமது மாணவர்க்கு காலம், இடம் அறிந்து வழங்கி வழிப்படுத்த வேண்டும். நாளைய உலகச் சிற்பிகளாக நமது மாணவர்களை நாம் நல்ல வழியிலே உருவாக்க இது பேருதவி புரியும்.

## பயங்கரப் பொதிகள் (A DEADLY LOAD)



கண்டம் விட்டுக் கண்டம் பாயும் அமெரிக்க ''எம். எக்ஸ் சமாதானப் பாதுகாவலன்'' (MX Peace Keeper) ஏவுகணைகளைக் கொண்டிருக்கும் ஐந்து முனைகளும் வெவ்வேறு இலக்குகளை ஒரே சமயத்தில் தாக்கவல்லவையாகும்.

## அரும்புகள்

# இயற்கை மீண்டும் வருமா?

இடி இடிக்குது மேகமல்ல
பீரங்கிகள் இடிக்கும் சத்தம்
மின்னி மின்னி மறையுது மின்னலல்ல
பராலைட்டின் வெளிச்சமது
ஊய்ங்... ஊய்ங்... இது காற்றல்ல
சுப்பர் சொனிக் வருசுது
வானில் ஒரே கருமுகில் போல் தெரிகிறது
அது விமானக் குண்டின் புகைக் கூட்டம்

சோ எனப் பொழிய வேண்டியது நீர்மழை
டும் டும் என பொழியுது குண்டு மழையாய்
நீலவானம் செவ்வானம் ஆனது
தென்றல் காற்றும் புயலானது.

மழைவளம் நீர் வளம் பெருகிய - எம்
நாட்டில் இன்று இயற்கையெல்லாம்
செயற்கையாய் ஆகிவிட்டது.
அன்னியர் செய்யும் இவ் வக்கிரமம்
என்றுதான் நீங்கிப்போகும்
நாளை எங்கள் சொந்த மண்ணில்
இந் நிலை மாறிப் போகுமா - மீண்டும்
இயற்கை அன்னை அன்புக்கரம் நீட்டி
அரவணைத்து ஆறுதல் தருவாளா?
செயற்கை மறைந்து மீண்டும்
பழைய இயற்கை தோன்றுமா?
நாடொன்று பிறந்திட்டால்
நிச்சயம் இவை மாறும்

சா. சாந்தி
கோப்பாய்

# முழு மனிதன் ஆகிடுவாய்

பள்ளி நூல்களின் சுமை அழுத்தும்
பாதை அறியாப் பாலகனே!
செக்கு மாட்டின் நிலை உன்னை;
சேரும் இடத்தில் சேர்க்கலையோ?
பரந்த நீளப் பாதைதனில்,
பாதம் தன்னைப் பதித்திடுவாய்
விரிந்த அறிவை வளர்த்திடுவாய்
வெளி உலகில் நீயும் இணைந்திடுவாய்
முழு மனிதனாக வளர்ந்திடுவாய்.

அட்சயா
சாவகச்சேரி

# பாட்டாளிகள்

சுட்டெரிக்கும் வெய்யில் ஓ...
சட்டென்று தெரியுது - தலைப்பாகை;
காடு திருத்தி நாடு காணும்
தன்நிறைவு - தன்மான வாழ்க்கை;
சிந்தும் வியர்வை - அது
மக்கள் உண்டிடும் உணவு;
இவை சுமைகளல்ல - அவர்களுக்கு
தன்மானம் உள்ளவரை;
வளமுள்ள மருதவளம் கண்ட
பாட்டாளிகள் - இவர்கள்;
தேசவிடிவின் சின்னங்கள்

கு. ராம்குமார்
சில்லாலை
வல்வெட்டித்துறை.

# சிந்தனைகள் பலசெய்வீர் சீர்பெற்று வாழ்ந்திடுவீர்

பழம்பெருமை பேசுமெங்கள் பண்பாடு
என்னவாச்சு?
பழந்தமிழன் என்றியம்பும் பெருமையும்
எங்குபோச்சு?
பாவலரும் நாவலரும் பாரெல்லாம் பரப்பிய
எங்கள், தாய்மொழியாம் தமிழ்மொழியின்
சிறப்பதனை உணர்ந்தாரா?
தமிழன் என்று கூறிமட்டும் பெருமைபல
அடைந்திடுவார்
கனடாவிற்குச் சென்றுவிட்டால்
கைகுலுக்கி 'மகிழ்ந்திடுவார்'
கண்டிக்குச் சென்றுவிட்டால்
'அப்புகாமி' என்று சொல்வார்
வள்ளுவனும் பாரதியும் சொல்லும் வழி
பலவிருக்க, அந்நியரின் மோகத்தில்
அடிமூழ்கிப் போவதேனோ?
வீரராய்ப் பலர் மடியும்போதும்
'வீடியோ' பார்ப்பதுவும்; வீதியிலே
வீற்றிருந்து வீண்கதைகள் பேசுதலும்
வீரம்மிகுந்த எங்கள் 'சங்க'ப்பரம்பரையின்
சந்ததிக்கு இழுக்கன்றோ?
சிந்தனைகள் பல செய்வீர் சீர்பெற்று
வாழ்ந்திடுவீர்!

கு. குணசீலன்
ஆண்டு - 13
யா / விக்ரோறியாக்கல்லூரி,
சுழிபுரம்

# தேசம் காக்கவென ..

ஓ... வீரமறவர்களே!
உங்களுக்குத் தலைசாய்க்கிறோம்
நீங்கள் கைகளை இழந்ததால் தான்
நாம் கவலையின்றித் திரிந்தோம்
உங்கள் கால்கள் இல்லாமல் போயின
எங்கள் கல்விகள் தொடர
கண்ணான கண்கள் பறிக்கப்பட்டன
எம் இனிய வாழ்வுக்காக
உணர்வுகளை ஒடுக்கிக் கொண்டீர்
எம் அபிலாசைகள் அர்த்தமாக
உற்றார் உறவினரை மறந்தீர்
உல்லாசமாக ஊரில் உலவினோம்
ஊடுருவிய கயவர்களை ஒழித்தீர்
தேசம் காக்கவென
உயிர் நீத்து உடலையும் சாய்த்தீர்
உரிமைகளை மீட்டெடுக்க என்றே.

– பிரகாசினி
சாவகச்சேரி

# வானில் பறக்கும் பட்டங்களே கவனம்!

தமிழீழ வான் பரப்பில்
தமிழனை அழிக்க வந்த
கயவனின் பட்டங்களே
நீ உன் தேசத்தை மறந்து
உன் குடும்பத்தை மறந்து
தமிழரின் எல்லையிலே
வெண்முகில் வான்பரப்பில்
வெறியாட்டம் ஆடுகின்றாய்
பூநகரியில் எடுத்ததெல்லாம்
பூண்டோடு உன்னை
அழிக்க என்பதை
அறியவில்லைப் போலும்

பா. ஹரிகரன்
இளங்கோ வீதி, கைதடி கிழக்கு.



# அவர்கள் அடிமைகளல்ல,

பெண்ணுரிமை என்பதையே
பெருமை போல் கூறி வைத்து
பெண்ணடிமை விதிக்கின்ற
கண்கெட்ட சமூகமே – கொஞ்சம்
கண் திறந்து பாராய்!

பெண்ணைத் தெய்வம் என - நீ
பெருவழக்காய் மொழிந்தாயே – ஆனால்
பெண் இன விடுதலையில் ஏனோ பேடித்தனம்

பெண் என்பவள் உன்
கண் முன்னிலே ஓர் பேதையா?
அவள் சுதந்திரம் என்பது உன்
வாய்ப் பேச்சு மட்டும் தானா?
பேதையவள் பேரினிலே பெரும்
பட்டியலே போட்டு விட்டாய்.

பேதைத்தனமானவளுக்கேன் பெருமதிப்பு
பெண்ணுக்கென்ன வேலை வெளியில்
கண் பட்டால் கெட்டுவிடும் பெண்மேனி
இல்லாள் என்பவள் இல்லத்தையே ஆளவேண்டும்
இல்லக் கடமையையே இறுதிவரை செய்யவேண்டும்
இவை தானே உந்தன் அரும் கருத்து

ஏ, பொல்லாத சமூகமே
கொஞ்சம் சிந்தித்துப்பார்
அகப்பை பிடித்த கைகள் துப்பாக்கி பிடிக்கின்றன
அடிமையாய் வாழ்ந்தவர்கள் ஆதிக்கம் பெற்றுள்ளார்
அடிபணிய வைப்பேனென்று இன்னுமா
உனக்கொரு நப்பாசை இருக்கிறது.

ஆதிக்க வெறிதனை அழித்து உலகில்
அதிகாரம் தன்னை தனதாக்கிக் கொள்ள
அறிந்து விட்டாள் நீ வளர்த்த
அடிமைப் பெண்ணவள்
ஆச்சரியம் கொள்ளாதே
அதிகாரம் அவளுக்கும் உண்டு.

கி. சஜிதா
மந்துவில்

# சற்று எட்டிப்பார்


புத்தகமும் புத்தகப்பையுமே
உலகமல்ல மாணவனே!
கிணற்றுத் தவளை வாழ்வை
விட்டுவிட்டு இன்றே
சற்று அகலவை மாணவனே
உன் பாதங்களை
குறித்த எல்லையினுள் வட்டமிட்டது
போதும் மாணவனே
வெளியே சற்று எட்டிப்பார்
உனக்காக எத்தனை எத்தனை
உலகங்கள் காத்திருக்கின்றன.

இ. பாமினி
சாவகச்சேரி.

# கிளைடர் (GLIDER)
## (சறுக்கு விமானம்)


பொதுவாக அற்றதும் வான்கலத்திலும் பார்க்க எடைகூடியதுமான இது பறத்தலைத் தொடர்ந்து பேணக்கூடிய திறன்கொண்டது. கிளைடரின் வளர்ச்சிக்குப் பலர் பங்களிப்புச் செய்திருந்தாலும் இவர்களுள் சிறப்புமிக்க முன்னோடியாகத் திகழ்ந்தவர் ஜெர்மனியைச்சார்ந்த (1848 - 96) ஒட்டோ லிலின்தல் (Otto Lilienthal) இவர் சகோதரரான குஸ்டாவுடன் (Gustav) இணைந்து 1867-ல் காற்றின் மிதப்பாற்றல், எதிர்ப்பு என்பனபற்றித் தேர்வாய்வுசெய்தார். அத்துடன் லிலின்தல், வில் சாய்வு (Camber) இறக்கையின் பகுதிகள் என்பவற்றை ஆராய்ந்து தான் கட்டியமைத்த கிளைடரின் உறுதிப்பாட்டைப் பெருக்குவதற்கு வழிகளைத் தேடினார். இறுதியாக இவற்றை ஒருங்கிணைத்து காற்பரப்பைச் சமநிலைப் படுத்தினார். 1891-ல் இவர் மனிதனைக் காவிச்செல்லும் தனது முதலாவது ஊர்தியைக் கட்டியமைத்தார். இதனைக் காற்றுக்கு எதிராக மலை உச்சியிலிருந்து கீழ்நோக்கிச் செலுத்துவதன் மூலம் மேல் எழச்செய்தார்.

1896-ல் பிரான்சில் பிறந்த அமெரிக்கப் பொறியியலாளர் ஒக்ரெவ் சுநெட் (Octave Chanute) கிளைடர்களை வடிவமைக்கத் தொடங்கினார். இவை இவரது மேற்பார்வையில் ஏனையோரால் செலுத்தப்பட்டது. தடையின்றி மேற்புறமாக இணைக்கப்பட்டுள்ள கிடையான பின்பகுதியில் பொருத்திய துடுப்பால் கட்டுப்பாட்டை உறுதியாக்கும் லிலின்தலின் முறையை இவர் அகற்றினார். அதற்குப்பதிலாகச் சுக்கானையும் (Rudder) பொருத்தப்பட்ட [Articulated (Segmented)] இறக்கைகளையும் பொருத்தினார். சுநெட்டுடைய கிளைடர்கள்



மிகவும் உறுதிப்பாடு கொண்டிருந்தமையால் இவர்களால் ஒரு விபத்துமின்றி 2000 பறப்புக்களை மேற்கொள்ளமுடிந்தது.

ஓர்விலும் (Orville) வில்பர் ரைடும் (Wilbur Wright) தமது மிக வெற்றிகரமான ஆரம்பகாலக் கிளைடர்களை 1902-ல் நிர்மாணித்தார்கள். ஆய்வுகளைத் தொடர்ந்து, பறப்பின்போது நகர்த்தக்கூடிய செங்குத்தான சுக்கானைப் பாவிக்கத் திர்மானித்தார்கள். பின்னர் அவர்கள் கிடையான ஓர் ஏற்றியையும் (Elevator) இணைத்துச் சரிசெய்யக்கூடிய செங்குத்தான சுக்கானோடு இறக்கையைச் சாய்க்கக்கூடிய பொறிமுறையையும் இணைத்தனர். இது இறக்கையின் பின்விளிம்பை மேலும் கீழும் நகர்த்த அனுமதித்தது. இந்தப் பூரண கட்டுப்பாடு அவர்களின் பறப்பைப் பாதுகாப்பாக்கியதோடு இயந்திரத்தால் இயங்கும் விமானத்தைத் தொடரவும் வழிவிட்டது.





பறத்தலுக்குக் கிளைடரைப் பறக்கும் வேகத்திற்கு விரைவுபடுத்தவேண்டும். இந்த வேகம் பூமியின் ஈர்ப்பிலிருந்து மேல் எழுவதற்கான வலுவை இறக்கைகளுக்கு ஏற்படுத்துகின்றது. அநேகமாக ஆரம்பகாலக் கிளைடர்களின் பறக்கும் வேகம் மிகக் குறைவு. காற்று வீச்சோடு பறப்பதே இவற்றின் வழக்கமான செயற்பாடாக இருந்தது. எனவே இதற்கு அதிகவிரைவு தேவைப்படவில்லை. இன்று விரும்பப்படும்மிதக்கவிடுவதற்கான தொழிற்நுட்பங்களாவன விமான இழுவையும் வாகன இழுவையுமாகும். இதற்காகப் பயன்படுத்தப்படும் இழுவைக் கயிறானது வழமையாக 200 அடி (60 மீற்றர்) நீளமானது. இதன் இரு முனைகளிலும் பொருந்தக் கூடியதானஎஃகு வளையங்கள் இணைக்கப்பட்டிருக்கும். இழுவைவாகனத்தினதும் கிளைடரினதும் இழுவைக் கொழுக்கிகளினால் கவண்வீச்சை அடிப்படையாகக்கொண்ட அதிர்வுக் கயிற்று (Shock Cord) ஏற்றம் மூலமும் கிளைடர்கள் வான் வெளிக்குச் செலுத்தப்படுகின்றன அல்லது பாரிய மீன்பிடி திருவகட்டு போன்று இயக்கும் உருளைத்திருகு இழுவையின் (Winch Tow) முனையில் மீனைப்போன்று கிளைடரை இணைத்தும் செலுத்தப்படும். தொங்கு கிளைடர்கள் (Hang-Gliders) உயரமான முனைகளில் இருந்து செலுத்தப்பட்டுக் கீழ்நோக்கித் தாழ்கையில் செயில்பிளேன் (Sailplane) கிளைடர்கள் வெப்பத்தினாலும் உயர்வான தரை அமைப்புக்களினால் காற்று மேல் எழுவதனாலும் பல மணித்தியாலங்களுக்கு மிதக்கின்றன.

1935-ல் இருந்து வான்பறப்புப் பொறியியல், வானிலை ஆராய்ச்சி போன்ற ஆய்வுகளுக்கான கருவியாக கிளைடர்களின் மதிப்பு உயர்ந்தது.


(...24ம் பக்கம் பார்க்க)

க. நாகேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# மூக்குக்கண்ணாடி மூலம் தெளிவாகக் காண்பது எவ்வாறு?

மூக்குக்கண்ணாடியைப் பார்வை வசதி குறைந்த குழந்தைகள் தொடக்கம் முதியவர் வரை பயன்படுத்துகிறார்கள். இதை 1266-ம் ஆண்டு இங்கிலாந்தைச் சேர்ந்த ரோகர் பேக்கர் என்பவர் கண்டுபிடித்தார். முதலிற் கோளவடிவமான கண்ணாடித் துண்டில் இருந்தே வெட்டியெடுத்து "பிரேமில்" பொருத்திப் பயன்படுத்தினார்கள். மூக்குக்கண்ணாடி என்றவடிவான உருவமைப்பானது 1266-1352க்கும் இடையிலேயே உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகின்றது.

தொலைவிலுள்ள பொருட்கள் மீதான சாதாரண பார்வையின்மை - **Myopia.**




அண்மையிலுள்ள பொருட்கள் மீதான சாதாரண பார்வையின்மை - **Hyper-Metropia**

1784-ல் பெஞ்சமின் ஃப்ராங்கலின் என்பவர் இரு கூறான முகப்புக்கண்ணாடி (Bifocal Lenses) யைத் தயாரித்து, புரட்சியை உண்டுபண்ணினார்.

நமது கண்கள் "கமெரா" போற் செயற்படுகின்றன. விழிவெண்படலத்தில் ஒளிக்கதிர்கள் விழுகின்றன. கண்ணினுள் இயற்கையாகவே குவிவு வில்லை (Convex lens) அமைந்துள்ளது. இந்த வில்லைக்குப் பின்புறம் விழித்திரை எனப்படும் திரையுள்ளது. பொருளில் இருந்துவரும் ஒளிக்கதிர் இக் குவிவுவில்லை காரணமாக விழித்திரையின் மீது தலைகீழ் விம்பமாகத்தெரிகிறது. பார்வை நரம்பின்மூலம் இது மூளைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு சரியான உருவில் விழுகிறது.

கண்ணிற் கோளாறு உள்ளவர்களுக்கே கண்ணாடி தேவைப்படுகிறது இக்கோளாறு முக்கியமாக 3 வகைப்படும்.

1. மயோபியா (Myopia) **Shortsightedness**

இவர்களுக்குத் தொலைவிலுள்ள பொருட்கள் மங்கலாகத் தெரியும். இதைச் சரிசெய்ய மூக்குக் கண்ணாடியில் குழிவுவில்லை (Concave Lens) யைப் பொருத்துகிறார்கள். இதன் மூலம் இக்குறைபாட்டை நீக்கிக்கொள்ளலாம்.

2. ஹைப்பர் மெற்றோபியா

**(Hyper - Metropia) Longsightdeness**

இக்குறைபாடுள்ளவர்களுக்கு அருகாமையிலுள்ள பொருட்கள் மங்கலாகவே தெரியும். காரணம் விம்பம் விழித்திரையின் பின்விழுவதேயாகும். கண்ணாடியிற் குவிவுவில்லையைப் பொருத்துவதன் மூலம் இக்குறையை நிவர்த்திக்கலாம்.

3. அஸ்மாடிக் மாடிசம்

கண்ணில் இக்குறைபாடு உள்ளவர்கள் நேர் கோடுகளையும், குறுக்குக்கோடுகளையும் காணமுடியாது. உருளைவில்லைகளைப் (Cylindrical Lens) பொருத்துவதன் மூலம் இக்குறையைச் சரிசெய்யலாம்.

இதைவிட "கூலிங்கிளாஸை"யும் பயன்படுத்துகிறார்கள். இவ்வகைக் கண்ணாடியிற் கறுப்பு, நீலம் போன்ற நிறங்களில் உள்ள கண்ணாடியைப் பொருத்துவதால் புற ஊதா நிறக்கதிர்கள் கண்ணிற் புகாதபடி தடுக்கப்படுகிறது.

(1) I) Myopia-distant Vision dot norma தொலைவிலுள்ள பொருட்கள் மீதான சாதாரண பார்வை இன்மை
  II) குழிவு வில்லை

(2) I) Normal Vision - சாதாரண பார்வை
  II) Iris - கதிராளி
  III) Lens – வில்லை
  IV) Cornea – விழிவெண்படலம்
  V) Eye – கண்

(3) I) Hypermetropia – Near not normal – அண்மையில் உள்ள பொருட்கள் மீதான சாதாரண பார்வை இன்மை
  II) குவிவுவில்லை

# அறிவுலகம் கேள்வி... பதில்...

— ஆனந்தி

க. வினோகாந்தன்
சாஸ்திரியார் வளவு, புலோலி தெற்கு, புலோலி

❀ எனக்குப் பதினாறு வயது. எனது தலைமயிர் இவ் விளம் வயதிலேயே இடைக்கிடை நரைக்கின்றது. இதனை ஆயுள்வேத வைத்திய முறை மூலமோ அல்லது ஆங்கில வைத்திய முறை மூலமோ குணப்படுத்த முடியுமா?

தலை மயிர் இளமையில் நரைப்பது பெரும்பாலும் பரம்பரையாக இருக்கலாம். தலைமயிருக்குச் செல்லும் குருதிச் சுற்றோட்டக் குறைவும் தலையோட்டின் மேல் தோலின் நோய்களும் காரணமாக இருக்கலாம்; மயிரின் நிறத்திற்குக் காரணமான மெலனோசைற்றுக்கள் என்ற நிறப்பொருள் குறைபாட்டினாலேயே, இக்குறைபாடு ஏற்படுகின்றது. மலேரியா நோய்க்குக் கொடுக்கப்படும் குளோரோ குயினும் மயிரின் நிறத்தை மாற்றலாம் முதலில் இள நரை ஏற்பட்டமைக்கான காரணத்தை ஆராய்ந்த பின்னரே சிகிச்சை பற்றிச் சிந்திக்கலாம். இளநரையை நீக்குவதற்கான சிகிச்சை முறைகள் மருத்துவத் துறையில் இல்லை. ஆனால் தலை மயிரைக் கறுப்பாக்கும் சாயப் பொருட்கள் இன்று பல்வேறு வர்த்தகப் பெயர்களில் விற்பனையாகின்றன. இவை நிரந்தர கருமையைத் தராது.

சி. சிவசுப்பிரமணியம்
நீராவியடி, யாழ்ப்பாணம்.

❀ இரத்ததானம் செய்வதால் மாரடைப்பு நோய் ஏற்படாது என்று சொல்கிறார்களே உண்மையா?

குருதியில் உள்ள ஈமோகுளோபினில் இரும்பு அயனின் அளவானது இருக்க வேண்டிய அளவை விட அதிகமாக இருப்பின் மாரடைப்பு ஏற்படச் சாத்தியம் இருப்பதாக மருத்துவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கிழக்கு பிராந்தியத்தில் மூன்று வருடங்களாக 2000 பேரை ஆய்வுக்கு உட்படுத்தியதன் பேரில், குருதியில் இரும்பின் அளவு அதிகமாக இருப்பின் 3 மடங்கு மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு என ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்த ஆய்வின் மூலம் பின்வரும் நடைமுறை நிகழ்வுகள் உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளன.

மாத விலக்கு ஏற்படும் காலம் வரை அதாவது மெனோபோசு காலம் வரை பெண்களுக்கு மாரடைப்பு ஏற்படுவதில்லை மாத விலக்கின் பொழுது குருதி வெளியேற்றப்படுவதால் அதனுடன் இரும்பும் வெளியேற்றப்படும் மாத விலக்கு நின்ற பெண்களிலேயே மாரடைப்பு ஏற்பட்டிருக்கின்றது. இதே போன்று இரும்புச் சத்துக் குறைவினால் ஏற்படும் அனிமியா நோய் உள்ளவர்களுக்கும் மாரடைப்பு ஏற்படுவதில்லை. இவற்றைக் கொண்டு பார்க்கும் பொழுது, குருதி அகற்றப்படும் பொழுது இரும்புச் சத்துக் குறைவடைவதன் காரணமாக மாரடைப்பு நோய் ஏற்படாது தடுக்கப்படுகிறது. எனவே இரத்த தானம் செய்யும் பொழுதும் கூட குருதியுடன் இரும்புச் சத்தும் அகற்றப்படுவதன் காரணமாக மாரடைப்பு நோய் ஏற்படுவதில் இருந்தும் தப்பிக்கொள்ளலாம். ஒருவர் வருடமொன்றுக்கு ஒரு பைந்து இரத்தத்தைத் தானம் செய்யலாம். இது இன்னொரு உயிரையும் காப்பாற்ற உதவும், மாரடைப்பில் இருந்து தப்பிக்கொள்ளவும் முடியும்.

சி. ஆனந்தவடிவேல்
செம்பியன்பற்று வடக்கு, தாளையடி.

❀ அன்புள்ள ஆனந்தி அக்கா! மின் கம்பத்தின் மின்கம்பிகளில் மனிதரின் உறுப்புக்கள் பட்டதும் மின் அதிர்ச்சி ஏற்படுகின்றது. ஆனால் காகங்கள் மின்கம்பிகளில் இருந்தால் மின் அதிர்ச்சி ஏற்படுவதில்லையே?

மின் அதிர்ச்சி ஏற்படுவதற்கு ஒரு உறுப்பினூடாகத் தொடர்ச்சியாக மின்னோட்டம் பாயவேண்டும், மனிதர்கள் மின் தாக்குக்கு உள்ளாகும்போது, புவியுடன் தொடுகையில் இருப்பதால் அவரது உடலின் ஊடாக மின்னோட்டம் கடத்தப்படுகின்றது. ஆனால் பறவைகள் ஒரு கம்பியில் மட்டுமே அமர்வதால் அவற்றினூடாக மின்னோட்டம் புவிக்குக் கடத்தப்படுவதில்லை. இதனால் அவற்றிற்கு மின்னதிர்ச்சி ஏற்படுவதில்லை. ஆனால் மின்கம்பங்களில் செல்லும் உயிர்க்கம்பி, புவிக்கம்பி ஆகியவற்றுடன் ஒரு உறுப்பின் பகுதிகள் தொடுக்கப்படுமானால் மின் சுற்று பூர்த்தியாக்கப்படுவதால், அது மின்னதிர்ச்சிக்கு உள்ளாகும்.

இ. மனோரஞ்சன்
யாழ்/ ஆழியவளை சி. சி. த. க. பாடசாலை,
தாளையடி.

❀ மண்டலாய் இயக்கச்சிப் பகுதியில் வை 8 விமானம் தீப்பற்றி எரிவதை நேரில் கண்டேன். ஆனால், அதனுள் இருந்த "கறுப்புப்பெட்டி" என்ற ஒரு பொருள் எரியவில்லை என்று சொல்கின்றார்களே அது உண்மையா? காரணம் என்ன? இதனைப் பற்றி விளக்குவீர்களா?

"கறுப்புப் பெட்டி" என்று சொல்லப்படுகின்ற 'Black Box' என்ற பெட்டி கண்டுபிடிக்கப்பட்டு ஏறக்குறைய 35 ஆண்டுகளுக்கு மேலாகின்றது. விமானங்கள் தீப்பிடித்தாலோ, விபத்துக்குள்ளாகினாலோ இது பழுதடைவதில்லை இந்தப்பெட்டியின் உலோகங்கள், வெப்பத்தினாலோ அல்லது அதிர்ச்சியினாலோ பாதிக்காதவகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இப்பெட்டியினுள் இலத்திரனியல் தொழில்நுட்ப வேலைப்பாடுகள் நிறையஉள்ளடக்கப்பட்டுள்ளன. விமானத்தின் முக்கியமான கணிப்புக்கள் கருவிகளின் வாசிப்புக்கள், விமானம் பறந்து சென்ற உயரம், அதன் வேகம் போன்ற விபரங்களும், விமானத்தினுள் இருந்தவர்களின் உரையாடல்கள், மற்றும் பூமியுடன் இருந்த கட்டுப்பாட்டுத் தொடர்பகத்துடன் ஏற்படுத்திய தொடர்புகள் போன்ற எல்லாம் பதிவு செய்யப்படும். இந்தப் பெட்டியைத் தேடி எடுத்து அதில் பதிவு செய்யப்பட்ட விபரங்களை அறிவதன் மூலம் விபத்துக்கான காரணங்களை அறிந்து கொள்ளலாம். உண்மையில் இந்தக் கறுப்புப்பெட்டி என்பது, செம்மஞ்சள் அல்லது மஞ்சள் நிறத்திலேயே அமைக்கப்படுகின்றன.

இ. மனோரஞ்சன்
ஆழியவளை, தாளையடி.

● வால்வெள்ளியைக் கண்டால் ஆதிகால மக்கள் தமக்கு ஏதோகெடுதி வந்து விட்டதாகக் கருதினார்களாம். இதைப்பற்றி தாங்கள் என்ன கூறுகின்றீர்கள்?


வால் நட்சத்திரங்கள் தோன்றினால் ஆபத்து என்று புராண இதிகாச காலம்தொட்டு வழங்கப்பட்டு வருகின்ற ஒரு நம்பிக்கை. ஆனால் அறிவியல் ரீதியில் அவற்றுக்கான ஆதாரங்கள் இல்லை. வால் நட்சத்திரங்கள் என்பவை மங்கிய பிரகாசமற்ற ஒளியை உடையவை, இவற்றின் வால்கள் பல மில்லியன் மைல்கள் நீளம் கொண்டவை. இவை குறைந்த அடர்த்தியுள்ள வாயுக்களைக் கொண்டவை. இதன் முழுப்பகுதியையும், வெறுங்கண்ணால்பார்க்க முடியாது. இதற்கென விசேட நுணுக்குக் காட்டிகளே பயன்படுத்தப்படுகின்றன. வால் நட்சத்திரங்களில் நச்சு வாயுக்கள் உள்ளன என ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இது வரை சுமார் 1000 வால் நட்சத்திரங்கள்வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 1986-ல் ஹேலியின் வால் நட்சத்திரம் தோன்றியது. இது 75 வருடங்களுக்கு ஒருமுறை ஆகாயத்தில் தோன்றும். ஹேலியின் வால் நட்சத்திரத்தைப்பற்றிய விபரம் கி. பி. 684-ல் "நியுரெம்பல்" செய்தி அறிக்கையில் உள்ளது. கி. பி. 1066-ல் Willium 'the Conqueror' என்பவர் இங்கிலாந்தின்மீது படையெடுத்தபோது இந்த நட்சத்திரம் தோன்றியதாம். அவர் நோர்மண்டியைச் சேர்ந்தவராதலால் நோர்மண்டியர்கள் இதனை நல்ல சகுனம் என நினைத்தனர். இதே போன்று ஜெருசலேம் நகரில் ஜேசுகிறிஸ்து தோன்றியபோதும் வால்நட்சத்திரம் தோன்றியது. இதுவும் ஒரு நல்ல சகுனமே எனக் கருதப்பட்டது, ஒவ்வொரு தடவையும் வால் நட்சத்திரங்கள் தோன்றும்போதும் பொதுவாக மக்கள் மனதில் இனம்புரியாத பயம் இருந்தாலும், வானசாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் வால் நட்சத்திரங்களினால் மனித இனத்திற்கு எவ்வித தீங்கும் ஏற்படாது என்றே கூறுகின்றனர்.

---

கிளைடர்... (21-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரேடியோக்கள் பதிவு செய்யும் உபகரணங்கள் என்பன பொருத்தப்பட்ட கிளைடர்கள் இடி புயல் (Thunder Storm) மையங்களுக்குள் திரண்ட மேகங்களின் (Cumulonimbus Clouds) இயக்கத்தையும் வலுவையும் சேகரிக்கப் பறக்கவிடப்பட்டன. உலகப் போர் II-ல் துருப்புக்களைக் காவிச்செல்லக் கிளைடர்கள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன. கிளைடர்களும் குறிப்பாகச் செயில் பிளேன்களும் பொழுது போக்குக் காரணங்களுக்காகவும் விளையாட்டுப் போட்டிகளுக்கான வாகனங்களாகவும் பெரிதும் பிரபலமடைந்துள்ளன.

---



## சின்னப் பையன்
## (LITTLE BOY)

1945-ம் ஆண்டு ஹிரோஷிமாவை முற்றாக அழித்த இந்த அணுகுண்டுக்கு "சின்னப்பையன்" என்றே பெயரிடப் பட்டிருந்தது. இதன் எடை 4100 கிலோகிராம் ஆகும். இதன் சக்தி 12000-13000 தொன் ரி. என். ரி. (T. N. T) க்குச் சமமானதாகும்.

கா. நாகேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# றொபேட் பேடன் பவல் பிரபு

**மாணவர் ஆக்கம்**

றொபேட் பேடன் பவல் என்பவர் 1857-ம் ஆண்டு மாசி மாதம் பிரித்தானியாவில் பிறந்தார். இவர் சாட்டர் கவுன்சில் கல்வி கற்றார். பாடசாலை படிப்பிலும் இவர் அவ்வளவு அக்கறை காட்டவில்லை. ஆனாலும் அறிவை கிட்டும் ஆற்றல் படைத்தவராகவும், நெஞ்சுறுதி கொண்டவராகவும், தலைமை தாங்கும் திறமையும் உள்ளவராகவும் காணப்பட்டார்.

அவர் கல்வி கற்ற பாடசாலைக்கு மிக அண்மையில் ஓர் காடு இருந்தது. கல்வி கற்கும் சமயம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் காட்டிலேயே காணப்பட்டார். அவர் காட்டுக்குள் உள்ளவற்றை மிக நுணுக்கமாக ஆராய்ந்தார். நிமிர்ந்து நேராக நடக்கவும், விலங்குகளின் அடிகளை பின் தொடரவும் பழகிய அவர் விலங்குகள் வசிக்கும் இடங்களில் நாம் எவ்வாறு வசிக்கலாம் என்பதையும். அவை தாக்க வரும் சமயங்களில் எவ்வாறான தற்காப்பு முறைகளை கைக்கொள்ளலாம் என்பதையும் ஆராய்ந்தார்.

இப்படியே அவர் இறுதியாக தொழில் நோக்கம் கருதி யுத்தப்படையில் நிபுணராக கடமையாற்றத் தொடங்கினார். அவரது துணிவையும் சாதுரியமாக உளவறியும் நுட்பத்தையும் கண்ட அரசு தென் ஆபிரிக்காவில் நடந்து கொண்டிருந்த போருக்கு சிறு படை அணிக்கு தலைவனாக்கி அனுப்பி வைத்தது. இவர் தன் படை அணியை $7\frac{1}{2}$ மாதங்களுக்கு மேலாக உஷார் நிலையில் வைத்திருந்து "எவல்ட்" எனும் தென் ஆபிரிக்காவில் உள்ள புற்றரைக் காட்டிலே எவ்வாறு சீவிக்கலாம் என்று தனது படை அணியினருக்கு பயிற்றுவித்தார்.

இப்படியாக இவர் 1899-ம் ஆண்டு உபதளகர்த்த பதவிக்கு உயர்த்தப்பட்டார். 1912-ம் ஆண்டு உலகத்தின் பல பாகங்களிலும் உள்ள சாரணர்களை சந்திக்க உலக பிரயாணத்தை மேற்கொண்டு சாரணீயம் ஓர் உலக சகோதரத்துவ இயக்கம் ஆவதற்கு ஆரம்ப முயற்சி எடுத்தார்.

1920-ம் ஆண்டு சர்வதேசத்து சாரணியரும் கூடினர். இவ்வைபவத்தின் இறுதி நாள் ஆகஸ்ட் 6-ம் திகதி பேடன் பவல் 'உலக பிரதம சாரணர்' என்று பிரகடனப்படுத்தப்பட்டார். இவர் 1941-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் திகதி காலமானார்.

# இலங்கையில் சாரணீய வளர்ச்சி

சாரணீய இயக்கம் றொபேட் பேடன் பவல் பிரபுவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவர் ஆபிரிக்காவில் நடந்த யுத்தத்திற்கு பின்னரே தனது யுத்தகால அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு சாரணீயத்தை ஆரம்பித்தார்.

முதல் முதலில் சாரணீய இயக்கம் 1907-ம் ஆண்டு 'பிரவுன்சி' எனும் தீவிலே 20 சாரணர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. 1910-ம் ஆண்டு முதலாவது பாசறை (Rally) நடைபெற்றது.

இலங்கையின் மாத்தறை எனும் இடத்தில் 1912-ம் ஆண்டு S. S. ரீபன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இதன் பின்பு 1918-ம் ஆண்டு திரி சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு 1920-ம் ஆண்டு ஆண்டு உலக ஜம் போறி நடைபெற்றது.

இலங்கையில் உள்ள செவி, விழிப்புலனற்றோர் பாடசாலைகளுக்கான சாரணீய இயக்கம் 1925-ம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

14வது உலக மகாநாடு நோர்வேயில் நடைபெற்ற போது இலங்கை உலக சங்கத்தில் ஒரு முழு நேர அங்கத்தினர் ஆக்கப்பட்டது. அடுத்து 'பொக்ஸ் லீஸி'யிலே நடைபெற்ற சர்வதேச உலக பாசறையின் போது இலங்கையின் சார்பாக செல்வி ரட்ணா அல்பின் கலந்து கொண்டு சிறப்பித்தார். இதற்கடுத்து கிரீஸில் 1960-ல் நடந்த 17வது உலக மகாநாட்டில் இலங்கையும் கலந்து கொண்டது.

1957-ம் ஆண்டு சாரணர் இயக்கம் 'இணைப்புச்சட்டம்' இலங்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

உலகின் பிரதம சாரணி 1960-ம் ஆண்டு 13வது தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்தார். அப்போது இவ்வருகையை திறப்பட நடாத்துவதற்காக திறந்த வெளியில் சாரண, சாரணிய பொதுக்கண்காட்சி நடாத்தி சிறப்பிக்கப்பட்டது.

1962-ம் உலக முதிர் நிலை உறுப்பினர் சேவைப் பாசறை கொழும்பிலுள்ள 'ஹவ்லொக் கோல்வின்'ல் இடம் பெற்றது.

இலங்கை 21வது உலக மகாநாட்டிலும் கலந்து கொண்டு சிறப்பித்தது.

இதுமட்டுமல்லாமல் 1966-ம் ஆண்டு யூலை மாதம் 27-ம் திகதி இலங்கை பாடசாலை மாணவர்கள் மூவர் இராணி மாளிகை சென்று இராணிச் சாரணீ விருதுகளை பெற்று உலக சாதனையை நிலைநாட்டினார்கள்.

இவர்கள் மூவருள் கே. பாலசுந்தரம் மலையகத்தையும், எம். சம்சுதீன் கல்முனையையும், எ. எம். கே. கலீல் புத்தளத்தையும் சேர்ந்தவர்கள்.

இவ்விருதுகளை அன்றைய மகா தேசாதிபதி வில்லியம் கோபல்லாவ வழங்கி கௌரவித்தார்.

இவர்களின் இச்சாதனைக்கு வழிகாட்டியாக அமைந்தவர். அன்றைய யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் வீ. சாந்தமூர்த்தி அவர்களாகும்.

ஜோ. குமார்
யா/ ம/ கல்லூரி
(ஆண்டு 13)

# ஆங்கிலம் மொழி கற்போம்
## LANGUAGE LEARN ENGLISH

க. நகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

## SCENE - EDUCATION CENTRE
## ENGLISH
## LESSON - FOUR

*We trust that you might have learnt with interest, the third lesson in English appeared in our last issue. In the same breath, we are commencing the fourth lesson. We earnestly welcome your comments regarding our English Lessons please.*

## இடம் - கல்வி நிலையம்
## ஆங்கிலம்
## பாடம் - நான்கு

*எமது சென்ற இதழில் வெளிவந்த மூன்றாவது பாடத்தினை ஆர்வத்துடன் கற்றிருப்பீர்கள் என நம்புகின்றோம். அதேபோன்று நான்காவது பாடத்தையும் தொடங்குகின்றோம். "ஆங்கிலம் கற்போம்" தொடர்பாக உங்கள் கருத்துக்களை வரவேற்கின்றோம்.*

We published in our last issue a letter written by a student to his friend in Colombo.

In this issue we give you a direct conversation between two friends.

**Kumar:-** Good morning, Suresh. —

**Suresh:-** Good morning, Kumar. —

**Kumar:-** I was informed that you went to Mullaitivu last week. Is it true? —

**Suresh:-** Yes, I went to Mullaitivu last week. —

**Kumar:-** May I know the purpose of your visit to Mullaitivu? —

**Suresh:-** My Uncle is living there. I paid him a visit. —

**Kumar:-** What is your Uncle doing there? —

**Suresh:-** He is an excellent farmer owning paddy fields there. —

**Kumar:-** Yes. You would have made your trip through the sea route of Kilali. Could you explain to me the experience you had by this trip? —

*கடந்த இதழில் ஒரு மாணவன் கொழும்பில் உள்ள தன் நண்பனுக்கு எழுதிய கடிதம் பிரசுரமானது. இம்முறை, இரு நண்பர்களுக்கிடையான நேரடி உரையாடல் ஒன்று இடம்பெறுகிறது.*

*குமார்:- காலை வணக்கம் சுரேஸ்.*

*சுரேஸ்:- காலை வணக்கம் குமார்.*

*குமார்:- கடந்த வாரம் முல்லைத்தீவுக்கு சென்று இருந்ததாக அறிந்தேன் உண்மையா?*

*சுரேஸ்:- ஆம். நான் கடந்தவாரம் முல்லைத்தீவிற்கு சென்றிருந்தேன்.*

*குமார்:- என்ன விடயமாக நீர் முல்லைத்தீவு சென்றீர் என்பதை நான் அறியலாமா?*

*சுரேஸ்:- அங்கே எனது மாமா இருக்கிறார். அவரைப் பார்ப்பதற்காகச் சென்று வந்தேன்.*

*குமார்:- உமது மாமா அங்கு என்ன செய்கிறார்.*

*சுரேஸ்:- அவருக்குச் சொந்தமாக நெல்வயல்கள் உண்டு. அவர் ஒரு சிறந்த கமக்காரன்.*

*குமார்:- சரி, நீர் கிளாலிக்கடல் வழியாகத்தான் பயணம் செய்திருப்பீர். அந்த அனுபவத்தை எனக்கு விளக்குவீரா?*

| English | | Tamil |
|---|---|---|
| **Suresh:-** There is nothing special to mention, but you know that I travelled twice before through Kilali Sea route. | — | சுரேஸ்:- குறிப்பிடும்படியாக ஒன்றுமில்லை. நான் முன்பும் இரண்டு தடவைகள் கிளாலிக் கடலில் பயணம் செய்தவன் தானே. |
| **Kumar:-** Have you travelled during the period when Naval Base at Poonakari was existing? | — | குமார்:- பூநகரி கடற்படைத் தளம் இருக்கும்போது பயணம் செய்திருக்கிறீரா? |
| **Suresh:-** Yes. I have travelled on two occasions there. | — | சுரேஸ்:- ஆம், இருதடவைகள் பயணம் செய்திருக்கிறேன். |
| **Kumar:-** Are there any marked differences in your present visit and previous visits? | — | குமார்:- அன்றைய பயணத்திற்கும் இன்றைய பயணதிற்கும் ஒரு வித்தியாசமும் இல்லையா? |
| **Suresh:-** Yes. There is. Last trip, of course, was with a great fear and now it is not that? | — | சுரேஸ்:- வித்தியாசம் இருக்கிறது. முன்பு மிகுந்த பயத்துடன் பயணம் செய்யவேண்டியிருந்தது. இப்போது பயமில்லை. |
| **Kumar:-** Why is that. | — | குமார்:- ஏன் அப்படி? |
| **Suresh:-** There were frequent attacks when Poonakari Naval Base was existing. | — | சுரேஸ்:- பூநகரி கடற்படைத்தளம் இருந்தபோது அடிக்கடி கடற்படையினர் தாக்குதல் செய்வார்கள். |
| **Kumar:-** Why? Attacks can also come from Elephant Pass camps. | — | குமார்:- இப்போது ஆனையிறவிலிருந்து தாக்குதல் செய்யலாமல்லவா? |
| **Suresh:-** Yes. Then we had problems of two face attacks and now it is not that. But during that time frequent attacks were from Poonakari side. | — | சுரேஸ்:- ஆம், ஆனால் முன்பு இருபுறமும் எமக்கு நெருக்கடி இருந்தது. இப்போது அப்படி இல்லை அல்லவா? அதேநேரம் பூநகரி பக்கமாகத்தான் முன்பு தாக்குதல்கள் அடிக்கடி நிகழ்ந்தன. |
| **Kumar:-** Is it taking a longer time even now to cross the lagoon like those days? | — | குமார்:- முன்னரைப்போல் இப்போதும் கடல் ஏரியைக் கடக்க அதிக நேரம் எடுக்கிறதா? |
| **Suresh:-** No. We can go faster than those-days? | — | சுரேஸ்:- இல்லை, முன்னரைவிட இப்போது விரைவாகப் போகக்கூடியதாகவுள்ளது. |
| **Kumar:-** Are there more people travelling through Kilali Sea route now unlike those day? | — | குமார்:- இப்போது முன்னரைவிட அதிகளவான மக்கள் கிளாலிக்கடலில் பிரயாணம் செய்கிறார்களா? |
| **Suresh:-** It appears so. | — | சுரேஸ்:- அப்படித்தான் தோன்றுகிறது. |
| **Kumar:-** Are there any safety arrangements to the travellers? | — | குமார்:- கடலில் மக்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளதா? |
| **Suresh:-** Yes. Sea Tigers are providing safety measures | — | சுரேஸ்:- ஆம். கடற்புலிகள் மக்களுக்கு பாதுகாப்பு வழங்குகின்றனர். |
| **Kumar:-** O. K. Thanks Suresh. I have a class at 9.00 O' Clock. I am leaving. | — | குமார்:- சரி, நன்றி சுரேஸ். எனக்கு ஒன்பது மணிக்கு வகுப்பு உள்ளது. விடைபெறுகிறேன். |
| **Suresh:-** Thank you Kumar. I shall meet you again at the foot-ball ground. | — | சுரேஸ்:- நன்றி குமார். நான் மீண்டும் உம்மை மாலையில் உதைபந்தாட்ட மைதானத்தில் சந்திக்கிறேன். |

01. Trip — பயணம்
02. Sea Route — கடல்பாதை
03. Explain — விளங்க வைத்தல்
04. Experience — அனுபவம்
05. Special — விசேடம்
06. Through — ஊடாக
07. Existing — தொடர்ந்திருத்தல்
08. Occasion — சந்தர்ப்பம்
09. Differences — வித்தியாசங்கள்
10. Great fear — மிகுந்தபயம்
11. Frequent — அடிக்கடி
12. Naval Base — கடல்படைத் தளம்
13. Attacks — தாக்குதல்கள்
14. Problems — பிரச்சினைகள்
15. Lagoon — கடலேரி
16. Faster — விரைவான
17. Unlike — போல் இல்லாமல்
18. Appears — தெரிகின்றன
19. Safety — பாதுகாப்பு
20. Arrangements — ஏற்பாடுகள்
21. Provide — வழங்குதல்
22. Measures — வழிவகைகள்
23. Class — வகுப்பு
24. Ground — மைதானம்
25. Football — உதைபந்து
26. Conversation — உரையாடல்
27. Mention — சொல்லுதல்
28. Period — கால கட்டம்
29. Previous — முன்னைய
30. Fear — பயம்

க. நகனேந்திரன்
புநாறி மரத்தடி
கொக்குவில்

சிறுகதை

# உரிமையும் உறவும்


ஆதிரவன் தன் இளங்கதிர்களை விரித்தவாறு கிழக்குவானில் மெல்ல மெல்ல மேலெழும்பிக்கொண்டிருந்தான். நகரம் வழமைபோலச் சுறுசுறுப்படையத் தொடங்கிற்று. துவிச்சக்கர வண்டிகளும், மோட்டார் சைக்கிள்களும், ஓட்டோக்களும் பிரதான வீதிகளில் விரைந்துகொண்டிருந்தன. பாடசாலைச் சீருடையுடன் நடந்தும், துவிச்சக்கர வண்டிகளிலும் விரைந்துகொண்டிருந்தமாணவஅணி பிரதான வீதிகளை அலங்கரித்துக்கொண்டிருந்தது. இவ்வாறு மக்கள் நிறைந்திருந்த வீதிகளில் ஏற்படக்கூடிய விபத்துக்களைத் தவிர்க்கும் பொருட்டுத் தமது கடமைகளில் ஈடுபட்டுக்கொண்டு இருந்தனர் காவற்துறையினர். பிரதான வீதியைக் கடந்து வைத்தியசாலையினுள் பிரவேசித்தது டாக்டர் அருணின் மோட்டார் சைக்கிள்.

சத்திர சிகிச்சைப் பிரிவிற் தேர்ச்சிபெற்றுப் பிரதம வைத்தியராகப் பதவியேற்றுக்கொண்ட அவர் அன்றுதான் முதன்முதல் பணியாற்ற வந்திருந்தார். அன்று அவரது முதலாவது சத்திர சிகிச்சைப் பணியைப் பெற்றுக்கொண்டவர் ஓர் இளம் தாய். பல மணிநேரப் பிரயத்தனத்தின் மத்தியில் தாயையும், சேயையும் காப்பாற்ற முடிந்தபோது டாக்டர் அருண் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ஒரு குழந்தையைப்போன்று பூரித்துப்போனார் அவர். அவரது பணியில் முதலாவது சத்திரசிகிச்சை அல்லவா அது. அவரது முகத்திற்தெரிந்த வெற்றிப் பிரமிப்பினை சக வைத்தியர்களும், கூடவே ஒத்தாசை புரிந்த தாதிகளும் கவனித்துக்கொண்டனர். தொடர்ந்து பல காலமாக எத்தனையோ உயிர்கள் அநியாய முறையில் அழிந்துகொண்டிருக்கும் இந்த மண்ணில் இரு உயிர்களைக் காப்பாற்றும் சந்தர்ப்பம் தனது புனிதத் தொழிலின்மூலம் தனக்குக் கிடைத்ததை எண்ணிப் பெருமை கொண்டார் டாக்டர் அருண்.

மனத்திருப்தியுடன் கதிரையில் அமர்ந்துகொண்டபோது எங்கோ தொலைவில் கேட்ட குண்டுச்சத்தங்கள் அவர் அடைந்த திருப்தியை அர்த்தமற்றதாக்கின. வானத் தாக்குதல்களைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்களும் கேட்கத் தொடங்கின. அங்கிருந்த அனைவரும் சோகத்தைப் பார்வைகளால் பரிமாறிக் கொண்டனர். "வாழவேண்டிய வயதிலை எத்தனை இளசுகள் செத்துக் கொண்டிருக்குதுகள்" வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்த தாதியொருவரின் உணர்வு, வார்த்தைகளாக வெளிப்பட்டபோது "வாழ்வதற்குத்தானே போராட்டம்" என்ற டாக்டர் அருணது வார்த்தைகள் அனைவரையும் சிந்திக்கவைப்பதற்கிடையில் அவலக்குரல் எழுப்பியவண்ணம் வைத்தியசாலையினுள் பிரவேசித்தது அந்த அம்புலன்ஸ் வண்டி,

அவசரமாக அம்புலன்ஸ் வண்டியிலிருந்து இறக்கப்பட்ட இரு போராளிகளும் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து சத்திர சிகிச்சை அறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். டாக்டர் அருண் தலைமையிலான வைத்தியக் குழுவே சத்திர சிகிச்சைப் பணியில் ஈடுபட்டது. காலிலும் முதுகிலும் எதிரியின் துப்பாக்கி ரவைகள்பாய்ந்திருந்தபோதும் உறுதி தளராதநிலையில் அங்கு கொண்டுவரப்பட்டிருந்த போராளிகளை ஒருவர்பின் ஒருவராகச் சத்திர சிகிச்சைக்குட்படுத்திய டாக்டர் அருண் அவர்கள் இருவரதும் உயிருக்கும் எதுவித ஆபத்துமில்லை என்பதைத் தெளிவாக்கியிருந்தார்.

அன்று காலையிலிருந்து அவர் மேற்கொண்ட சத்திர சிகிச்சைகள் அனைத்தும் அவருக்கு அளித்த மனநிறைவு ஒருபுறமிருக்க, களமாடி வந்த இரு வேங்கைகளைக் காப்பாற்றமுடிந்த திருப்தியே அவர் உள்ளத்தை நிறைத்து நின்றது. பள்ளிப்படிப்பில் இருந்து, மருத்துவப் படிப்புவரை தொடர்ந்து, இன்றுவரை மண்பற்றும், முற்போக்குக் கொள்கை



களும் கொண்டவராகத் திகழும் டாக்டர் அருண் இன்று ஒரு பிரபல வைத்தியராகத் திகழ்வதற்கு முற்று முழுதாகக் காரணமானவர் டாக்டர் அருணைவிட அவரது தம்பி யதார்த்தன் என்று கூறுவதே பொருத்தமானது.

இறுதியாக யதார்த்தன் எழுதிய அந்த சிறிய கடிதத்தைத் தனது டயறியினுள் அவன் நினைவாக வைத்திருந்தார்.

அண்ணா,

மண்மீட்கும் பணியிலே ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. அந்த உரிமையை எவராலுமே மறுக்கமுடியாது என்பது உண்மை

தான். ஆனால் உங்களைப் பொறுத்தவரை நீங்கள் செய்யப்போகும் அந்த மருத்துவப் பணியே எமது மண்மீட்புப் போருக்கு மிகவும் பக்கபலமானது. ஆகவே நீங்கள் எனது வழியில் தொடராமல் உங்கள் பாதையில் எமது மண்ணுக்குப் பணிபுரிவீர்கள் என்ற நம்பிக்கையோடும் எமது உரிமைகளைப் பெற்ற பின்னரே எமது உறவுகள் நிலைக்கமுடியும் என்ற உறுதியோடும் விடைபெறும் தங்கள் அன்புத் தம்பி

யதார்த்தன்

❀ ❀ ❀

அந்தச் சிறிய கடிதத்தின் ஆழமான அர்த்தங்களோடு வாழ்ந்து கொண்டிருப்பவர் டாக்டர் அருண்.

சத்திர சிகிச்சை முடிவடைந்து போராளிகள் உரிய வார்ட்டுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருக்கும்போதே அம்புலன்ஸ் வண்டியின் அவலஒலி திரும்பவும் வைத்தியசாலைச் சுவர்களில் முட்டி மோதி எதிரொலித்தது, தொண்டர்களும் தாதிகளும், வைத்தியர்களுமென வைத்தியசாலைப் பணியாளர்கள் சுறுசுறுப்படைந்து காணப்பட்டனர்

நெஞ்சிலும் தலையிலுமிருந்து பீறிட்ட இரத்தத்திற்குக் கட்டுகள் போடப்பட்ட நிலையில் மயக்கமடைந்தவனாக 'ஸ்ரெச்சரில்' வைத்து வேகமாகத் தள்ளிக்கொண்டு வரப்பட்ட போராளி வேறு யாருமல்லன் டாக்டர். அருணது தொழிலின் அவசியத்தை அன்று உணர்த்திச்சென்ற அவரது தம்பி

## நிதர்சனா - பொன்னையா

யதார்த்தனேதான். அவனை அந்நிலையிற் கண்டபோது சத்திரசிகிச்சை அறைச்சுவர்களே தன்மீது இடிந்து விழுவதுபோன்ற ஒரு உணர்வு ஒரு கணம். ஒரேகணம்தான். இரத்தபாசமோ என்னவோ அப்படியொரு உணர்வைத்தோற்றுவிக்க மறுகணம் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு தன் நிலையுணர்ந்து மிகவும் நிதானமாகத் தொழிற்படத் தொடங்கினார் டாக்டர் அருண்.

எதிரியின் துப்பாக்கி ரவைகள் யதார்த்தனின் நெஞ்சினுள்ளும், தலையினுள்ளும் பாய்ந்துள்ளன என்பதை எக்ஸ்றே படப்பிரதி தெளிவாக்கிற்று. அவருக்கு தனது தொழிற்திறமையால் அவனது நெஞ்சிலிருக்கும் ரவைகளை வெளியேஎடுக்க முடிந்தாலும்கூட தலையுள் பாய்ந்துள்ள ரவைகளால் யதார்த்தனின் மூளை வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதை அறிந்துகொண்டார் டாக்டர் அருண். அதனால் சத்திரசிகிச்சை எதுவித பயனுமளிக்காது என்பதை அவரது வைத்தியக்கணிப்பு அவருக்கு உணர்த்திற்று. சத்திரசிகிச்சையின்போது உயிர்பிரியச் சந்தர்ப்பமுண்டு அது தவிர்க்கப்பட்டாலும் சில மணிநேர மயக்கநிலையின் பின்னர் அவனது உயிர் பிரியும் சந்தர்ப்பமுண்டு என்பதை யதார்த்தன் ஐந்து வருடங்களுக்கு முன்னர் பிறந்தநாள் பரிசாக அன்பளிப்புச்செய்த அதே பேனாவால் தனது குறிப்பில் எழுதி ஒப்பமிட்டார் டாக்டர் அருண்.

சத்திரசிகிச்சை அறையிலிருந்து திரும்பவும் வார்ட்டுக்குக் கொண்டு செல்லப்பட்ட யதார்த்தனைப் பலர் சூழ்ந்து நின்றனர். எதுவித உணர்வும் அற்றுப் படுத்திருந்த அவனது இதயம் மாத்திரம் இயங்கிக் கொண்டிருந்தது. இறப்பை நிச்சயமான பின்னும் சகபோராளிகள் அவனது விழிப்புக்காக அருகில் காத்து நின்றனர்.

தன் கொடூர ஆட்சியைச் செலுத்தி உலகையே வெம்மைக்குள்ளாக்கிய சூரியன் வெம்மை தணிந்து மெல்ல, மெல்ல மேற்கு வானில் தவழத்தொடங்கினான். காலையில் திருப்தியுடன் ஆரம்பித்து மாலையில் அதிருப்தி தந்த தனபணி முடித்து சத்திரசிகிச்சை அறையிலிருந்து வெளியே வந்தார் டாக்டர் அருண். அலுவலகத்திற் சென்று ஒப்பமிட்டபின் நேராக யதார்த்தன் படுத்திருந்த கட்டிலை நோக்கிச் சென்றார் அப்போது பார்வையாளர் நேரமென்பதால வார்ட்டுகளிலும், விறாந்தைகளிலும் நோயாளர்களின் உறவினர்களும், நண்பர்களும் குழுமியிருந்தனர். உறவின் ஆழங்களை உணர்த்தும் இடமாக விளங்கிற்று அவ்வைத்தியசாலை அழுகை ஒலிகளும், ஆறுதல் வார்த்தைகளுமே அங்கு கேட்டுக்கொண்டிருந்தன. டாக்டர் அருணும் ஒரு வைத்தியனாக அன்றி ஒரு அண்ணனாக யதார்த்தன் அருகில் சென்றார்.

அறிவு மயங்கிய நிலையிலும், மூச்சின் சப்தத்துடன் அண்ணை தரும்பப் படுத்திருந்தான் யதார்த்தன். அவனுக்கு அருகேயுள்ள கட்டிலில், அன்று மதியம் - டாக்டர் அருணால் சத்திரசிகிச்சை செய்யப்பட்ட போராளி நித்திலன் மயக்கம் நன்றாகத் தெளியாதநிலையில் வாய்புலம்பத்தொடங்கினான் ''டேய் ..... யதார்த்த ... உன்ரை துணிச்சலை எப்படிச் சொல்லுறதடா,. பொறு ... பொறு சபாஸ்'' என்று கூறிப் பலத்தகுரலில் சிரித்தான் நித்திலன். அவனது வாயிலிருந்து வெளிப்பட்ட அந்தப்புலம்பல் டாக்டர் அருணுடைய கண்களிலிருந்து உதிர்த்த கண்ணீர்த்துளிகளை யாருக்கும் தெரியாதவாறு துடைத்துக்கொண்டார் அவர். நித்திலனின் வார்த்தைகளை ஜீரணிக்க யதார்த்தன் நிஜவுலகில் இல்லையே என்றகவலை ஒருபுறமிருக்க, யதார்த்தனது நிலையை நித்திலன் உணரும் நிலையில் இல்லையே என்பது மறுபுறமிருக்க - பிஞ்சு வயதில் பென்சில் சீவும்போது தவறுதலாக பிளேற்றினால் கீறப்பட்டு அண்ணனின் கையில் இரத்தம் கண்டாற்கூடப் பொறுக்கமாட்டாது 'ஓ' வென்று வீரிட்டு அழும் தம்பி இன்று காலத்தின் தேவைக்காய் துணிச்சல் மிகுந்தவனாய்த் தன்னை மாற்றி வீரத்தழும்புகளுடன் வந்ததையும் அவனது துணிவை அவனது சகதோழனே பாராட்டக்கேட்ட நிகழ்வுமே அண்ணன் மனதைக் கரைய வைத்ததென்றே கூறலாம்.

வைத்தியப் பணியை வலியுறுத்திய தன் தம்பியின் உடல் தன் பணியை ஏற்காமலே உயிரைப் பிரியப்போகின்ற வேதனை வாட்டிவதைத்த போதிலும், அந்த தளராத நின்ற ஏனைய போராளி

(...32 ஆம் பக்கம் பார்க்க)

# வரலாற்றில் நிலைபெற்றுவிட்ட தியாகம்

தமிழீழ போராட்ட வரலாற்றில் இந்தியாவின் தலையீடுகள் மிக முக்கியமான பக்கங்களாகும். அமைதிப்படை என்ற பெயரில் தமிழீழத்திற்குள் புகுந்த இந்திய ஆக்கிரமிப்புப்படை தமிழ் மண்ணில் ஏற்படுத்திவிட்ட காயங்கள் மிக ஆழமானவை. அதன் வடுக்கள் தமிழீழ சமுதாயம் வாழும்வரை மறையாமலிருக்கும்.

தமிழ் மக்களின் ஒப்புதலின்றி செய்யப்பட்ட ஜே. ஆர் – ராஜீவ் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆயிரக்கணக்கான இந்தியப்படையினர் தமிழீழத்திற்குள் கொண்டுவரப்பட்டனர். சாதாரண தமிழீழ மக்கள் பின்னால் நடைபெறப்போகும் பயங்கரங்களை அப்போது அறிந்திருக்கவில்லை. தம்மைக் காப்பாற்ற வந்த காவலர்கள் என்றே இந்தியப் படையை வரவேற்றனர். சிங்களப்படையின் துன்புறுத்தல்களில் இருந்து தாங்கள் காப்பாற்றப்பட்டுவிட்டதாக எண்ணி மகிழ்ந்தனர் ஆனால் தமிழ் மக்களின் கனவுகள், எதிர்பார்ப்புகள் யாவும் சில நாட்களுக்குள்ளாகவே கலைந்து போயின.

சொலை, சித்திரவதை, பாலியல் வன்முறை போன்ற செயல்களில் தாம் தனிப்பயிற்சி பெற்றவர்கள் எனநிரூபிப்பது போன்று இந்தியப்படையினர் தமதுசெயற்பாடுகளை முடுக்கிவிட்டனர். தமிழர்தம் ஊர்களிலும், கிராமங்களிலும், புகுந்த இந்தியப் படை தமது வன்முறை மூலம் தாம் எவ்விதத்திலும் சிங்களப்படையினருக்கு சளைத்தவர்களல்ல என பறைசாற்றுவதுபோல், தமிழ் மக்களை பல்வேறு வழிகளிலும் துன்புறுத்தத் தொடங்கினர். தமிழ் மக்கள் அதிர்ச்சியடைந்தனர்.

மட்டுநகரெங்கும் இந்தியப்படையினரால் நடத்தப்பட்டுக்கொண்டிருந்த படுகொலைகளும், பாலியல் வன்முறைகளும் அன்னை பூபதியை ஆவேசம் கொள்ளச் செய்தன. அன்னை பூபதி அவர்கள் கூட ஆரம்பத்தில் இந்தியப்படை தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் என்றே எண்ணம் கொண்டிருந்தார். அன்னையின் மகனொருவன் சிறிலங்கா இராணுவத்தினரால் துடிதுடிக்க சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவமும், இன்னொரு மகன் நான்குவருட காலம் பூஸா முகாமில் சித்திரவதைக்குள்ளான சம்பவமும் அவர் மனதில் ஏற்கனவே தீயை மூட்டியிருந்தன. நம்பியிருந்த இந்தியப்படையும் இவ்வாறு நாசவேலைகளைச் செய்யத்தொடங்க அத்தீயானது மேலும் கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது. அன்னை பூபதி வீறுகொண்டு எழுந்தார். அன்னையர் முன்னணியை அணிவகுத்து அகிம்சைப் போரை ஆரம்பித்தார். தென்தமிழீழமெங்கும் அன்னையர்களால் சுழற்சி முறையிலான உண்ணா விரதங்கள் மேற்கொள்ளப்பட்டன. இது உலகம் முழுவதும் இந்தியாவின் சுயரூபத்தைக்காட்டும் பிரச்சாரமாக ஒலிக்கத்தொடங்கியது. இதனால் இந்தியப்படையினர் அன்னையர் போராட்டத்தை முறியடிக்க பல வழிகளில் முயற்சிகளை மேற்கொண்டனர். அன்னையர் மீது பயங்கர அழுத்தங்களைப் பிரயோகித்தனர். சுழற்சிமுறை உண்ணா விரதத்தை சாகும்வரை உண்ணா விரதமாகக் கடைப்பிடிப்பதென அன்னையர் முன்னணி முடிவெடுத்தது. அன்னை பூபதியும் அன்னம்மா டேவிட் அவர்களும் இவ்வுண்ணாவிரதமிருக்கப் போட்டியிடுகின்றனர். குலுக்கல் முறையில் அன்னம்மா டேவிட் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டு உண்ணா விரதத்தை ஆரம்பிக்க; பல்வேறு சதித்திட்டங்களை வகுத்து இந்திய இராணுவம் அதனை முறியடித்துவிடுகிறது. அதனையடுத்த அன்னை பூபதி தான் சாகும்வரை உண்ணா விரதம் இருக்க முடிவுசெய்கின்றார். அன்னம்மா டேவிட் அவர்களுக்கு நேர்ந்த கதி தனக்கு நேரக் கூடாது என்பதில அன்னை பூபதி உறுதியாக இருந்தார். அதற்காக கடிதமொன்றினையும் சமர்ப்பித்தார்.

'நான் எனது சுயவிருப்பத்தின் பேரிலேயே உண்ணா விரதமிருக்கிறேன். இவ்வுண்ணாவிரதத்தின் போது, நான் நினைவிழந்து போகும் நிலை




யில் என்னை என் கணவனோ, பிள்ளைகளோ, உறவினர்களோ காப்பாற்றவோ, தூக்கிச்செல்லவோ முடியாது' என அச்சடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

- இந்தியப்படை தமிழ் மக்களுக்கெதிரான யுத்தத்தினை நிறுத்த வேண்டும்.
- தமிழீழ விடுதலைப்புலிகளை அழைத்துப் பேச்சு நடாத்தி சமாதானத்தீர்வு காணப்படவேண்டும்

இந்த இரு கோரிக்கைகளையும் முன்வைத்து மேற்கொள்ளப்பட்ட அன்னையின் உண்ணாவிரத நோன்பு 19.03.1988 சனிக்கிழமை ஆரம்பமானது. மட்டக்களப்பு எங்கும் அடையாள உண்ணாவிரதங்களும் நடாத்தப்பட்டு அகிம்சைப்போர் காட்டுத்தீபோல் எங்கும் பரவ, அலை அலையாக மக்கள் திரள்கின்றனர். (32 ஆம் பக்கம் பார்க்க)

# பொது அறிவுப்போட்டி - 3

1. மாணவர்களுக்கு பொதுவாக அரசியல் குறித்த சிந்தனை, விளக்கம் என்பன-
   1) தேவையில்லை.
   2) தேவையானது.
   3) அரசியல் படிக்கும் மாணவர்களுக்கு மட்டும் தேவையானது.

2. சமூகத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களால் மக்கள் அடைந்த இலாபங்களை, பலாபலன்களை, மாற்றங்களை இம்முறை மூலம் இனங்காண முடியும். இம்முறையினையே அரச, அரசசார் பற்ற நிறுவனங்கள் கையாளுகின்றன அது-
   1) வருமானத்தின் விபரம் சேகரித்தல் மூலம்
   2) தேர்தல் நடாத்துதல் மூலம்.
   3) சமூக அளவீட்டு முறை மூலம்.

3 விண்வெளியில் முதன்முதல்பயணம் செய்தவர்-
   1) நீல் ஆம்ஸ்ட்ரோங்.
   2 யூரிககாரின்
   3) மைக்கல் கொலின்.

4. இவர் யூகோஸ்லாவியநாட்டு அரசியல் மேதை யாவார் -
   1) நெப்போலியன்.
   2) மாக்சிம் கோர்க்கி
   3) மார்ஷல் ரிற்றோ.

5. 1990 - ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப்போட்டி நடைபெற்றநாடு-
   1) இத்தாலி. 2) மெக்சிக்கோ.
   3) பிரான்ஸ்.

6. விரும்பிய மதத்தைப் பின்பற்றவும், ஆதரிக்கவும், விரும்பிய மொழியைப் பேசவும், விரும்பிய இடத்திற்குப் பிரயாணம் செய்யவும், விரும்பிய இடத்தில் வசிக்கவும் உள்ள உரிமைகள், மற்றும் எழுத்துரிமை, பேச்சுரிமை' போன்றன-
   1) பொருளாதார உரிமைகள் எனப்படும்.
   2) அரசியல் உரிமைகள் எனப்படும்.
   3) குடியியல் உரிமைகள் எனப்படும்.

7. தமிழீழத்தில் முதன்முதலாக அமைக்கப்பட்ட சிறுவர் போசாக்குப் பராமரிப்புப் பூங்கா?
   1) கைதடியில் அமைந்துள்ளது.
   2) பொம்மைவெளியில் அமைந்துள்ளது.
   3) சுண்ணாகத்தில் அமைந்துள்ளது.

8. இப்பழம் காகேசியாவை தாயகமாகக் கொண்டதாகக் கூறப்படுகின்றது -
   1) வாழைப்பழம்.
   2) தோடம்பழம்.
   3) திராட்சைப்பழம்.

9. ஓசோன் வாயுவை சோன்பீன் என்பவர் எந்த ஆண்டில் கண்டுபிடித்தார்-
   1) 1840. 2) 1480. 3) 1810.

10. உலகிலேயே ஆழமானதும் பெரியதுமானகடல்-
   1) வடிகடல்.
   2) செங்கடல்.
   3) பசுபிக்கடல்

## பெப்ரவரி, மார்ச் மாத பொது அறிவுப்போட்டி 2க்கான விடைகள்

1) மன்னன் பண்டாரவன்னியனின் வீரத்தைப் போற்றும் வாசகம் ஒன்று பிரித்தானிய தளபதி ஒருவனால் எழுதிவைக்கப்பட்டதாகக் கருதப் படுகிறது. அது கற்சிலைமடுவில் உள்ளது.

2) எல்லாநோயாளிகளுக்கும் இரத்ததானம் செய்வதற்கு பொருத்தமான இரத்தம் 'O' வகை

3) வீனஸ் என்றழைக்கப்படும் கிரகம் வெள்ளி ஆகும்.

4) 1977 - ம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த கலாநிதி காஸ்வல் என்பவர் யாழ். அல்லைப்பிட்டியில் அகழ்வாய்வு செய்து பெருந்தொகையான பாத்திரங்களைக் கண்டுபிடித்தார். அப்பாத்திரங்கள் சீனாவினுடையது.

5) புறஊதாக்கதிர்கள் (Ultra Violet Rays) மூலம் எமது தோல் உயிர்ச்சத்து D யை தயாரித்துக் கொள்கிறது.

6) நீரில் கலக்கப்படும் குளோரினால் புற்றுநோய் உண்டாகலாம் என மருத்துவ ஆய்வொன்று தெரிவிக்கின்றது.

க. நாகேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

7) 1996 ஆம் ஆண்டு ஒலிம்பிக்போட்டிகள் அட்லாண்டா அமெரிக்கா,வில் நடைபெறும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

8) தமிழீழ தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் பள்ளிச்சிறுவனாக இருந்த காலத்தில் 1958 - இல் நடந்த இனக்கலவரங்களினால் நடந்த துயரமான சம்பவங்கள் தன்னைப் பாதித்தது என ஒரு பேட்டியின்போது கூறியுள்ளார்.

9) வெளிநாடுகளில் வாழுகின்றவர்களின் இலக்கியம் புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என அழைக்கப்படுகின்றது.

10) பூமி உட்பட அனைத்துக் கோள்களும் சூரியனை மையமாகக் கொண்டு சுற்றுகின்றன என்ற கொள்கையை முதன் முதலில் வெளியிட்டவர் நிக்கலஸ் கொப்பனிக்கஸ்

போட்டியில் பங்குகொண்ட பெருந்தொகையான வாசகர்களில் நூறுக்கும் மேற்பட்டோர் சரியான விடைகளை எழுதியனுப்பியுள்ளார்கள். அனைவருக்கும் எமது பாராட்டுக்கள் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

**முதலாம் பரிசைப் பெறுபவர்:-**
செல்வி. ம. யுவராணி,
இல. டீ, 20, தொடர்மாடி,
குருநகர்.

**இரண்டாம் பரிசைப் பெறுபவர்:-**
செ. விக்கினேஸ்வரன்,
ஆண்டு 11, கொக்குவில் இந்துக்கல்லூரி
கொக்குவில்.

**மூன்றாம் பரிசைப் பெறுபவர்:-**
சுகந்தி குணரத்தினம்,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

இவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்!

யாழ். எழிலகம் ஸ்தாபனம் வழங்கும் முறையே 250/-, 150/-, 100/- பெறுமதியான அன்பளிப்பு மடல்கள் இவர்களை வந்துசேரும். அதனைக் கொண்டு தமக்கு விருப்பமான பொருட்களை எழிலகத்தில் இவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

---

உரிமையும் உறவும்.. (4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் மத்தியில் எதனையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் உறுதியுடன் நின்றார் டாக்டர் அருண்.

வைத்தியசாலையை அதிரும்படி அடுத்தவார்ட்டில் கேட்ட அழுகுரல்களைத் தொடர்ந்து அனைவரது கவனமும் அங்கு திரும்பின. வேலைக்குச் சென்ற குடும்பத்தலைவன் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது வழியில் வானத்தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அங்கு இறந்தமையால் மனைவியும், பிள்ளைகளும் எழுப்பிய அழுகுரல்களே அவை என்று அறியமுடிந்தபோது, யதார்த்தன் இறுதியாக எழுதிய ''எமது உரிமைகளைப் பெற்ற பின்னரே எமது உறவுகள் நிலைக்க முடியும்'' என்ற வார்த்தைகளின் பெறுமதி டாக்டர் அருணைப் பொறுத்தவரை மிக அதிகமாகப்பட்டது. கணவன் - மனைவி, தந்தை - பிள்ளை, அண்ணன் - தம்பி, நண்பன் என்ற அத்தனை உறவுகளுமே இழந்த எமது உரிமைகள் மீட்டெடுக்கப்படும் வரை கேள்விக்குறிகளே என்பதை ஐந்து வருடங்களுக்கு முன்னரே நிதர்சனமாக உணர்ந்து, அதைத் தனக்கு உணர்த்தி இப்போது எதனையுமே உணரமுடியாதவனாகப் படுத்திருக்கும் யதார்த்தனையே அருணின் கண்கள் பார்த்து நின்றன.

செய்தியறிந்து வைத்தியசாலைக்கு விரைந்து வந்த டாக்டர் அருணின் தாய், தன் இளையமகன் படுத்திருந்த அந்தக் கோலத்தைக் கண்டு நிலத்தில் விழுந்து புரண்டழுதாள். டாக்டர் அருணையும், ஐந்து வயது இளையவனான யதார்த்தனையும் பிள்ளைகளாகப் பெற்ற அந்தத் தாய் தன் உணர்ச்சிகளை வார்த்தைகளாகக் கொட்டி அழுதாள். அங்கிருந்த யாராலுமே அவளைத் தேற்ற முடியவில்லை. டாக்டர் அருண் அவளைத் தடுக்கவும் முயலவில்லை. காரணம், நிஜவுலக உணர்வுகளே அற்றுப்போயிருந்த யதார்த்தனால் தாயின் புலம்பல்களை எந்தவிதத்திலும் உணர்ந்து கொள்ள முடியாதென்பது அவருக்கு நன்றாகத் தெரியும்.

அன்னையின் அந்த அழுகுரலுக்காகவே காத்திருந்தவன்போல சில நிமிட நேரத்தின் பின் யதார்த்தன் தன் இதயத்துடிப்பையும் நிறுத்திக் கொண்டான். வீரவேங்கை யதார்த்தனைத் தாங்கிய ஊர்தியுடன், உரிமைப் போரில் அவன் சந்தித்த உறவுகள் முன் செல்ல - இரத்த உறவினால் அண்ணனான அருணது மோட்டார் சைக்கிள் அவ்வூர்தியைப் பின் தொடர்ந்து சென்றது. ❦

---

வரலாற்றில் .. (30ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய இராணுவம் அதிர்ச்சியடைகிறது. அகிம்சைப்போரை அடக்க பகீரத முயற்சிகளை மேற்கொள்கிறது. பல சதித்திட்டங்களைத் தீட்டுகிறது. வன்முறைகளில் ஈடுபடுகிறது. அன்னையின் மனவுறுதி மேலும் பலப்பட்டதே தவிர சிறிதும் தளரவில்லை.

இந்திய இராணுவ மட்டத்திலும், அதிகாரிகள் மட்டத்திலும் மேற்கொள்ளப்பட்ட எத்தனையோ முயற்சிகள் அன்னையின் நோன்பை முறியடிக்க முடியாமற்போய்விட்டது.

19 03 1988-ல் ஆரம்பித்த உண்ணாவிரதம் 31-ம் நாள் முடிவுறுகிறது. ஆம் அன்னையின் உயிர் பிரிந்ததன் மூலம்! அதன்பின்பு அன்னையின் உயிரற்ற உடலைக் கைப்பற்றும் இந்திய இராணுவத்தின் முயற்சிகள் கூட தோல்வியுறுகின்றன. மக்கள் அணிதிரள, அலங்காரங்களுடன் அன்னையின் உடல் அடக்கம் செய்யப்படுகின்றது.

அன்னை பூபதியின் இத்தியாகம் தமிழீழ பெண்ணினத்தையே எழுச்சிகொள்ளச் செய்தது. அன்னையின் மனவுறுதிக்கும், துணிச்சலுக்கும் இந்திய வல்லாதிக்கம் தலைகுனிந்தது.

தமிழீழப் போராட்ட வரலாற்றில் அன்னையின் தியாகம் அழுத்தமாக நிலைபெற்றுவிட்டது.

யாழ் குடாநாட்டில் பின்வரும் விற்பனை நிலையங்களில் சாளரம் சஞ்சிகையினைப் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| பூபாலசிங்கம் புத்தகசாலை | — | யாழ்நகர் |
| தமிழ்த்தாய் புத்தகசாலை | — | யாழ்நகர் |
| ஆனந் புத்தகசாலை | — | யாழ்நகர் |
| யாழ் புத்தகசாலை (புதியபஸ்நிலையம் முன்பாக) | — | யாழ்நகர் |
| வசந்தம் புத்தகசாலை (புதியபஸ்நிலையம் முன்பாக) | — | யாழ்நகர் |
| அறிவரன் புத்தகசாலை | — | யாழ்நகர் |
| அறிவுச்சோலை (வேம்படி) | — | யாழ்நகர் |
| சிறிகாந் புத்தகசாலை | — | நல்லூர் |
| கனகா ஸ்ரோர்ஸ் | — | திருநெல்வேலி |
| ராம்கரன் புத்தகசாலை | — | திருநெல்வேலி |
| சிவன் ஸ்ரோர்ஸ் (பல்கலைக்கழகம் முன்பாக) | — | திருநெல்வேலி |
| செந்தமிழ் சோலை (பல்கலைக்கழகம் முன்பாக) | — | திருநெல்வேலி |
| நாவலர் புத்தகசாலை | — | மந்திகை |
| மொடேன் ஸ்ரோர்ஸ | — | நெல்லியடி |
| உதயன் புத்தகசாலை | — | பருத்தித்துறை |
| ஆசிர்வாதம் புத்தகசாலை | — | சாவகச்சேரி |
| சிவன்மெடிக்கல்ஸ் | — | சாவகச்சேரி |
| மது புத்தகசாலை | — | கொக்குவில் |

பாடசாலை மாணவர்கள் தங்களது பாடசாலைகள் ஊடாக சாளரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகளில் சாளரம் பெற்றுக்கொள்ள முடியாத மாணவர்கள் தயவுசெய்து தங்களது பாடசாலையின் விபரத்துடன் எம்மோடு தொடர்பு கொள்ளவும்.

# மதுரம் தயாரிப்புக்கள்

பொருளாதாரததடை உடைத்து
பசியகற்றும் பணியில்
நாவுக்கு சுவையாக்கி
உடலுக்கு ஊட்டமளிப்பதுடன்
பிணிக்கு மருந்தாகிறது.

- ★ குரக்கன் பணிஸ்
- ★ வரகுப்பாண்
- ★ குரக்கன் பிஸ்கட்
- ★ கம்பு பிஸ்கட்
- ★ கொக்கோ கிறீம் பிஸ்கட்
- ★ தினை பிஸ்கட்

இவை மட்டுமல்ல
இன்னும் பல தந்து
உடலுழைப்பாளிகளின்
பலம் பெருக்குபவன

இன்றே உங்கள் வளமான வாழ்வை நலமாக பேணிட
சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட எமது உற்பத்திகளை
பாவித்து பயனடையுங்கள்.

மதுரம் பலாலி வீதி,
உரும்பிராய்.